கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(01.12.2019 - 01 மார்கழி, 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 221, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



**திருவருகைக் காலம்**

**01.12.2019**



# புதிய அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்



## சுதந்திர ஆணைக்குழு ஒன்றை நியமித்து உடனடியாக நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க ஆலோசித்துள்ளோம்

கொழும்பு உயர்மறைமாவட்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை, புதிய ஜனாதிபதி மேன்மைத் தங்கிய ஜனாதிபதி கோத்தபாய இராஜபக்ஷ அவர்கள் சந்தித்த போது, பாஸ்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய அரசாங்கத்தினால் நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்! என பேராயர் தனது வேண்டுகோளை முன்வைத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது உயிரிழந்த 300க்கும் மேற்பட்ட மக்களுக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை. குண்டு தாக்குதலும், மக்களைக்கொல்லவும் ஒத்துழைப்பு வழங்கியவர்களை கண்டுபிடிக்க வேண்டும். இத்தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், எந்த மதம், இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எமது மக்களின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டு சுதந்திரமாக நடமாட இடமளிக்க முடியாது. இதற்கு இடமளித்தால், நாம் அவர்களுக்கு செய்யும் அநீதியாகும். அதனால் புதிய அரசாங்கம் நீதியைப் பெற்றுத்தரும் என எதிர்பார்க்கிறோம் என கர்தினால் ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார். அதற்கு பதிலளித்த புதிய ஜனாதிபதி, பாஸ்கு ஞாயிறு குண்டுத்தாக்குதலைப் பற்றி முழுமையாக தேடிப்பார்க்க, சுதந்திர ஆணைக்குழு ஒன்றை நியமிக்க கருதியுள்ளோம். ஆணைக்குழுவில் பேராயரின் பிரதிநிதியையும் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கிறோம். அதேபோல் இத்தாக்குதலினால் உயிரிழந்த, காயமடைந்த மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையாயின் உடனடியாக நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க ஆலோசித்துள்ளோம். அதேபோல் இன்னுமொரு முறை இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வோம் என கூறினார்".

இச்சந்திப்பின் போது துணை ஆயர் மேதகு. ஜே.டீ. அன்தனி ஆண்டகை, மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையுடன் மறைமாவட்ட பரிபாலகர் அருட்பணி. டெனிஸ்டன் சுபசிங்க அடிகளார், மறைமாவட்ட பொருளாளர் அருட்பணி. ஜூட் சமந்த அடிகளாரும் கலந்துக்கொண்டனர்.

**தகவல் மற்றும் படம் : திரு. T. சுனில்**

## நல்லாயன் சபையின் புதிய தலைமைத்துவ குழு

### நல்லாயன் சபையின் புதிய மாகாணத்தலைவி



நல்லாயன் சபையின் இலங்கை - பாக்கிஸ்தான் மாகாணத்திற்கான புதிய தலைவியாக அருட்சகோதரி மேரி ஆன் பெரேரா அவர்கள், 20.11.2019 அன்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 2020, இறையியல் கலைமானிப் பட்டப்படிப்பிற்கான நேர்காணல்

கார்த்திகைத் திங்கள் 17ம் நாள் ஞானஒளிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கேற்ப, எதிர்வரும் மார்கழி மாதம் 7ம் நாள் சனிக்கிழமை, கொழும்பு அக்குவைனாஸ் பல்கலைக்கழக விரிவுரை மண்டபமொன்றில் மாலை 4.00 மணிக்கும் 6.30 மணிக்குமிடையில் இறையியல் கலைமானிப் பட்டப்படிப்புக்கான நேர்காணல் நடைபெறும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..


## வாழ்த்துகின்றோம்

**கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர்களான**

**அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை 6.12.2019 அன்று தனது பெயர் கொண்ட தினத்தையும் பிறந்த நாளையும் கொண்டாடுகின்றார்.**



**அதிமேதகு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை 12.12.2019 அன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகின்றார்.**



**இவர்களை ஞானஒளி இறையாசீருடன் வாழ்த்துகின்றது.**

## இலங்கையின் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பேராயரை சந்தித்தார்

இலங்கையின் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை 25.11.2019 அன்று மாலை வேளையில் ஆயர் இல்லத்தில் வைத்து சந்தித்தார். இவர்களுடன் துணை ஆயர்களான மேதகு. ஜே.டீ அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை மற்றும் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகையும், இத்தாலியின் இலங்கை தொழிலாளர் ஒருங்கிணைப்பாளரான அதிவண. மொன்சிங்கோ நெவில் ஜோ பெரேரா அடிகளார், மற்றும் அருட்பணி. டெனிஸ்டன் சுபசிங்க அடிகளாரும், அரசின் புதிய அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.



**தகவல் மற்றும் படம் : திரு. T. சுனில்**

## இச்சிற்றாலயம் ஆண்டவர் பார்வையில் மிகப் பெரிய ஆலயம்






குயில்கா தோட்டத்தில் வாழும் எமது மக்களுக்காக நிர்மானிக்கப்பட்ட இந்த ஆலயம் இத்தோட்டத்தின் குன்றின் மேல் இருக்கும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும். (தி.பா 72)**

# கிறிஸ்து பிறப்பு பெருவிழா – 2019

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிறப்பு செய்தி

**அன்பான சகோதர சகோதரிகளே,**

இன்னுமோர் கிறிஸ்து பிறப்பு பெருவிழா தொடக்கத்தின் விழுப்பில் நாம் இருக்கின்றோம் மனுக்குலத்தின் மீடபிற்காக மனிதனாக எம்மிடையே பிறக்கும் அளவிற்கு கீழ்ப்படிந்த இறைவன் எமக்கு காட்டுகின்ற மாபெரும் அன்பை பற்றி எமக்குள்ள நம்பிக்கையை ஒளிர்விக்கின்ற செய்தியை கிறிஸ்து பிறப்பு பெருவிழா நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. இந்த அன்பை மிஞ்சிச்செல்லும் அன்பொன்றை தவிர மனித வரலாற்றில் வேறொன்று இல்லை. எல்லாம் வல்ல நித்திய இறைவன் எம்மை மீட்டு கொள்வதற்காக தனிப்பட்ட விதத்தில் தாமே தலையிட்டு தம்மையே எவ்வளவு தாழ்த்திக்கொண்டார் என்றால் அவரே நமது பலவீனமான சாதாரண மனித இயல்பை ஏற்று மனிதனாக மாறி அவர் எம்மோடு இருப்பதாகவும், எமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஒரே உலக மீட்பர் மற்றும் நற்செய்தி ஆகிய இரண்டும் அவரே என்பதையும் நமக்கு நினைவூட்டினார்.

### உன்னதமான நிகழ்வு

16ம் பெனடிக்ட் திருத்தந்தை "கிறிஸ்துவின் பிறப்பானது ஒட்டுமொத்த படைப்பை விடவும் சிறந்ததொன்று" என கூறுகின்றார். அளவியல் ரீதியில் பார்க்கும் போது படைப்பானது மாபெரும் ஒன்றாகும் ஆயினும், அதனோடுகூட ஒப்பிட்டு பார்க்கும் போது மனுவுருவெடுத்தல் மிகவும் சிறியதொரு நிகழ்வாகும். அது எவ்வாறாயினும் பாஸ்கல் எனும் தத்துவ ஞானி கூறியதன்படி ஒரு மனிதனின் இதயம் பிரபஞ்சத்தின் முழு அளவைவிடவும் உயரந்த அளவில் உள்ளது என்றால் படைத்தவர் அதாவது தொடக்கத்தில் இருந்து இருந்த வார்த்தையானவர் மனிதனாக மனித இயல்புக்குள் தன்னை ஒன்றிணைத்தல் அதாவது அவர் மனிதனாகுதல் எவ்வளவு உன்னதமானது என்பதை நாம் விளங்கி கொள்ள வேண்டும் என்கின்றார். (God and The World Ignatius Press 'San Francisco 2002,PP215-16 )

எனவே கிறிஸ்து பிறப்பு பெருவிழா மகிழ்ச்சியை வெளிப்படுத்த நாம் மேற்கொள்ளும் புற செய்ப்பாடுகளின் ஊடக வெளிக்காட்டப்படுவதை விட ஆழமான ஆன்மீக முக்கியதத்துவம் கிறிஸ்து பிறப்பு பெருவிழா அடங்கி உள்ளது. மேலும் ஒரு போதும் எம்மை கைவிடாத இறைவனில் உள்ள ஆழமான அன்பை அனுபவிப்பதனால் உண்டாகும் மகிழ்ச்சியால் எமது அகம் நிரப்படுகின்றது. எமது பாவ இருப்புகளுக்கு மதிப்பளித்தது எமது நிம்மதியற்ற இதயங்களை நம்பிக்கையால் ஒளிபெறச்செய்கின்றது. இதை குறித்து எசாயா இறைவாக்கினர் "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது". (9,2) என்று கூறியுள்ளார்.

### திருத்தந்தை பிரான்சிஸ்

இறைவாக்கினர் கூறிய இறைவாக்கை பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறுகின்றார் "நாங்கள் ஆசிர்வதிக்கப்பட்ட இரவில் இறைவனின் ஆலயத்தில் ஒன்றுகூடியுள்ளோம் இந்த உலகை சூழ்ந்துள்ள இருளை நாம் கடந்துள்ளோம் நாம் இவ்வாறு செய்வது நம்பிக்கையெனும் விளக்கின் ஒளியால், பெரும் வழிகாட்டுதலால் மற்றும் உண்மையான பேரொளியை கண்டதன் விளைவாக எம்முள் உள்ள வைராக்கியமாக நம்பிக்கையின் புத்துயிர் ஊட்டலால் ஆகும். (கிறிஸ்து பிறப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலியில் ஆற்றிய உரையை பார்க்கவும்)

திருத்தந்தை கூறிய இந்த கருத்துக்கு பின்னணியாக இருப்பது என்னவென்றால் மனிதனின் சுயநலமும் அந்த சுயநலத்தால் எமது வாழ்வில் உண்டாகியிருக்கும் இருளுமாகும். மனிதன் பலவீனமானவன் பாவதில் வீழ்ந்து அழிவுறக்கூடியவன். அவன் அனுபவிக்கும் வயப்படுதல் மற்றும் இருள், இந்த இருளில் இருந்துதான் சுயநலம் எழுப்பப்படுகிறது. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நாம் செலவிடும் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கடக்கவேண்டியுள்ளது இந்த அன்றாட போராட்டத்தின் ஊடாகவே திருத்தந்தை இவ்வாறு கூறுகின்றார். "பொறாமையால் குருடனாகி தன் சகோதரனை கொன்ற காயீனின் யுகத்தில் அதாவது மனித வரலாற்றில் முதற் குற்றம் இடம்பெற்ற அந்த இருளின் தருணத்தை சிந்தியுங்கள்".

அதன் பிரதிபலனாக அன்று முதல் இன்று வரை எமக்கு சொந்தமாகி இருப்பது வன்முறை, போர், வெறுப்பு மற்றும் துன்புறுத்தல் போன்றவற்றால் நிறைந்துள்ள சமூகமாகும். ஆயினும் தம் உருவிற்க்கும், சாயலிற்கும் சமமாக படைக்கப்பட்ட மனிதனில் எதிர்பார்ப்பை வைத்திருந்த இறைவன் மிகுந்த பொறுமையோடு அவனில் வைத்திருக்கும் நம்பிக்கையை கைவிடாமல் அவனில் தீயகுணங்கள் காணப்பட்டாலும் இன்னும் அதிகமாய் அவனில் பொறுமையோடு காத்திருக்கிறார்" (2014 மார்கழி மாதம் 24ம் திகதி நள்ளிரவு திருப்பலி மறையுரையை பார்க்கவும் ).

அவ்வாறாயினும் அவ்வாறே பார்த்துக்கொண்டு இருக்க இயலாமல் இறைவன் மனிதனில் வைத்திருக்கும் பரிவிரக்கத்தின் நிமித்தம் எமக்காக அவரே முன்வந்து மனித வரலாற்றில் நுழைந்து கிறிஸ்து பிறப்பு இரவில் பெத்லகேம் நகரில் தம் ஒரே பெயரான மகனை இவ்வுலகில் பிறப்பிக்க வழிவகுத்தார். இதை குறித்து தூய யோவான் "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்". (யோவான் 1 , 14) என்றும், "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்." எனவும் கூறுகின்றார். எனவே, நாம் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவில் கொண்டாடுவது இறைவனின் அன்பையும் எல்லையற்ற பரிவிரக்கத்தின் மீது வைத்திருக்கும் எமது நம்பிக்கையையும் ஆகும். மாறாக அதை அதிகம் மகிழ்ச்சி கொண்ட விழாவாக உண்டு, குடித்தது, வெறித்து, வீண்விரயம் செய்து, பயனற்ற போலியான வெளிவேடமான விடயங்களில் அல்ல, துரதிஷ்டவசமாக இன்று அநேகமானோருக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழா வெறுமனே மக்களை மகிழ்விக்கும் உலகை சார்ந்த கொண்டாட்டமாகியுள்ளது. எனவே நிதானமற்ற அதிகம் மகிழ்ச்சி கொண்ட விழாவாக கிறிஸ்து பிறப்பு பெருவிழாக அல்லாமல் உண்மையான கிறிஸ்து ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவிப்பது மிக முக்கியமானது என்பது தெளிவாகின்றது

### கிறிஸ்து பிறப்பு பெருவிழா – 2019

கத்தோலிக்கர்களாகிய நாங்கள் இவ்வருடத்தில் நினைவிற் கொள்ளவேண்டிய விடயம் என்னவென்றால், கடந்த பாஸ்கா ஞாயிறன்று இடம்பெற்ற அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் எமது நாட்டிலும் வேறுநாடுகளிலும் இன்னும் வேதனையோடு இருக்கின்றார்கள் என்பதையாகும். தங்களின் அன்பானவர்களின் பிரிவும் பிரிவால் அவர்களது இதயங்களில் ஏற்பட்டுள்ள அழித்திட முடியாத வெறுமை மற்றும் தனிமையினாலும் காயப்பட்டோர், உடல் ரீதியாக அனுபவித்து வரும் பாதிப்பில் இருந்தும் எவ்வகையிலும் இயல்பு நிலைக்கு திரும்ப இயலாத வகையில் உடைந்து நொறுங்கி சிதைந்து போயிருக்கும் அவர்களது வாழ்வும் தங்களது பெற்றோரை நிரந்தரமாக பிரிந்துள்ள பிள்ளைகளையும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலய உறுதிபூசுதல் நிகழ்வு – 2019



செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் ஆலய மாணவர்களுக்கான உறுதிபூசுதல் நிகழ்வு 24.11.2019 அன்று அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் காலை 7.00 மணித் திருப்பலியில் நடைபெற்றது. அன்றைய திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை ஒப்புக்கொடுத்தார். 150 மாணவர்கள் திருவருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

**தகவல் மற்றும் படம் : திரு. டிக்சன் பர்னாந்து.**




அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தனது பிறந்த நாளையும் தனது பெயர்கொண்ட திருவிழாவையும் முன்கொண்டு கடந்த 15ம் திகதி திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களுடன் துணை ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையும் இணைந்துக் கொண்டனர். திருப்பலிக்குப் பின் கேக் வெட்டி வாழ்த்த வந்த சிறுமிக்கு கேக் கொடுப்பதை படத்தில் காணலாம்.

## மொனராகல தூய அந்தோனியார் ஆலய திறப்பு விழா








மொனராகல தூய அந்தோனியார் ஆலய பங்கு ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளாகிவிட்டது. இவ்வாலய திருப்பலியில் பங்குபற்றுவதற்கு தோட்டப்புர மக்களுக்கு 80கிலோ மீற்றர் தொலைவில் இருந்து வருகை தரவேண்டியுள்ளது. வேறு பிரதேச தோட்ட மக்களுக்கு அவருடைய இடங்களில் சிறிய ஆலயங்கள் காணப்படுகின்றது. ஆனால் எமது தோட்ட மக்களுக்கு இவ்வளவு காலமாக ஆலயம் அமைக்கப்படாமல் இருந்தமையும் தற்போது அதன் முக்கியத்துவத்தை அறிந்து மக்கள் செப, தவ, தியானங்களின் ஊடாக தமது இறை உறவை வளர்த்துக் கொள்ளுவதற்கு எமது பங்குத்தந்தை அருட்பணி. சுனில் விஜயரட்ன அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆர்ஜுன் முத்தையா மற்றும் அவர்களின் குடும்பத்தாரால், புனித யூதா ததேயுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் 12.11.2019 அன்று போகாலன் தோட்டத்தில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை எமது பதுளை மறைமாவட்டத்தின் ஆயரான வணக்கத்திற்குரிய வின்சன்ட் பெர்னான்டோ, அருட்தந்தை ரவின் பெரேரா மற்றும் எமது பங்குதந்தை சுனில் விஜயரட்ண அடிகளாரின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. இவ்வாலயத்தை புதிதாக அமைப்பதற்கு எமக்கு உதவி செய்த ஆர்ஜுன் முத்தையா மற்றும் அவர்களுடைய குடும்பத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

**தகவல் : L. அருள் பிரஷாந்தன்**

**போகாலன், கும்புக்கன, மொனராகல**

ஞான ஒளி GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
01 மார்கழி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# “கிறிஸ்மஸ் ஒரு ஆடம்பர விழா அல்ல, அது ஒரு பகிர்தல் விழா”

கத்தோலிக்க திருச்சபையானது இவ்வருடம் மார்கழி முதலாம் திகதியிலிருந்து திருவருகைக் காலத்தைத் தொடங்குகின்றது. கிறிஸ்துவின் பிறப்பு விழாவுக்கு முன்வரும் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளை உள்ளடக்கிய காலமே திருவருகைக் காலம். இக்காலத்தில் நம்மை தகுந்த விதத்தில் தயாரித்துக் கொள்வதற்காக இக்காலத்தை ஒவ்வொரு ஆண்டும் திருச்சபை அறிவிக்கின்றது.

திருவருகைக் காலம் என்பது இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவதற்காக நம்மைத் தயாரித்துக் கொள்ள அழைக்கும் காலம். திருவருகைக் காலம் என்பது ஒரு தவக்காலம் ஆகும். மனம் வருந்துதலையும், செப, தவ நோன்பிருந்து இயேசுவின் வருகைக்காக தம்மையே தூய்மைப்படுத்திக் கொண்டு காத்திருக்கும் காலம். அதுமட்டுமல்ல உன்னதத்தில் கடவுளின் வலப்புறத்தில் மகிமையுடன் அமர்ந்திருக்கும் இறைமகன் இயேசு மானிடருக்கு நீதி வழங்குவதற்காக வரும்போது, அவரைச் சந்திப்பதற்காக நம்மைத் தயாரித்துக்கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். இயேசு மீண்டும் ஒரு மனிதக் குழந்தையாக இவ்வுலகில் தோன்றப் போவதில்லை என்பது நம் விசுவாசம் கற்றுத்தரும் பாடம். ஆனால் அவரது பிரசன்னத்தை அவரது பிறப்பாக நம் உள்ளங்களில் நாம் உணர்ந்துகொள்ளலாம்.

இயேசுவின் பிரசன்னம் நம் உள்ளங்களில் உணரப்படுகின்றபோது அவர் நம்மில் பிறந்திருக்கிறார் என்று நாம் உணர முடியும். இயேசுவின் பிரசன்னத்தை நாம் திருவருகைக் காலத்தில் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். எனவே திருவருகைக் காலத்தை அர்த்தமுடன் கொண்டாட ஆயத்தமாகுவதற்காக திருச்சபை எமக்கு இன்னுமொரு வரம் ஒன்றை கொடுத்துள்ளது. அவைதான் நாம் ஆண்டுதோறும் மார்கழி 8ஆம் திகதியன்று கொண்டாடும் “மரியா அமல உற்பவி” என்ற விழாவாகும். திருவருகைக் காலத்தில் இவ்விழா அமைந்திருப்பது மிகவும் பொருத்தம் என்று கூறலாம். மரியா இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்து காத்திருந்தார். நாமும் இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்திருந்து எம்மை தயாரிக்க வேண்டும். இதனால் திருவருகைக்கால தயாரிப்பின்போது நாம் மரியாவை நோக்கி செபிக்கவும், அவரது அருட்துணையை நாடவும் இவ்விழா உதவுகின்றது. அத்தோடு கிறிஸ்மஸ் விழா ஒரு ஆடம்பர விழா மட்டும் அல்ல, அது ஒரு பகிர்தல் விழா. பகிர்தல் இல்லையென்றால் அவ்விழாவிற்கு அர்த்தம் இல்லை. கிறிஸ்மஸ் விழா அன்று நாம் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்ல, மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். பசித்தவர்களுக்கு உணவு அளித்து, ஆடையற்றவர்களுக்கு ஆடை கொடுத்து, நோயுற்றவர்களை பார்க்கச் சென்று, சிறையில் இருப்பவர்களை காணச்சென்று... போன்ற இறைவார்த்தைக்கு ஏற்ப நாம் வாழும்போது நாம் உண்மையான இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தமுள்ளதாக்குகின்றோம். ஆகவே நம்மிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வோம். அப்போது இயேசு எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் வந்து பிறப்பார்.

**இறையாசிருடன் ஆசிரியர்**

# மரியாவின் அமல உற்பவம் இறைவனின் திருவுளமே!



**அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி**

கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச வாழ்விலும் அதன் இறையியல் சிந்தனைகளிலும் தனியான இடம் வகிப்பவள் அன்னை மரியாள். ஏனெனில் இவ்வுலகில் மனிதனாய் உடலெடுத்த இறைமகன் கிறிஸ்துவின் அன்புத்தாய் அன்னை. இறை வட்டத்திலிருந்து மனித வட்டத்துக்குள் நுழைந்த, இறைமகன் கிறிஸ்துவை தனது வயிற்றில் கருவாகத் தாங்கி, அவருக்கு மனித உருவம் கொடுத்து, இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவள். இது இறைவன் அன்னைக்கு கொடுத்த சலுகை அல்ல, மாறாக இறைவன் அவளுக்கு அளித்த மாபெரும் அழைப்பு ஆகும். இத்தகைய உன்னத நிலைக்குத் தேர்ந்து கொள்ளப்பட்டதன் காரணமாக இறைவன் அவளை மாசு மறுவற்றவளாக உருவெடுக்கச் செய்தார். இதனால் தான் மரியாளை நாம் அமல உற்பவி என்று அழைக்கின்றோம்.


சுவக்கீன் (எதிர்பார்த்திருப்பவர்) அன்னாள் (முடிவற்ற வாழ்வாகிய அருள்) இருவரும் தவமிருந்து பெற்றெடுத்த இணையற்ற செல்வமே எம் அன்னை மரியாள். மரியாள் என்றால் “ஒப்பற்று உயர்ந்தவள்”, “உன்னத மகிமை கொண்டவள்” என பொருள். இவள் பிறப்பால் “மாந்தர் அனைவருக்கும் மீட்பளிக்கும் கடவுளின் அருள் பிரசன்னமாகிறது” (தீத் 2: 11). எனவே மரியாள் என்னும் நாமம் மானிடர்க்கு அன்பும் அருளும், ஆற்றலும் அளிக்கும், கவலையைப் போக்கும் துன்பத்தை நீக்கும், சோதனையை வெல்லச்செய்யும், நம்பிக்கையூட்டும்: விசுவாசத்தைக் காக்கும் வான் வழி நடத்தி, வல்ல பரனடி சேர்த்து என்றென்றும் வாழவைக்கும் என்பது எமது விசுவாசம்.

பரிசுத்த கன்னிமரியாள் தன் தாயின் வயிற்றில் கருவானதில் எல்லாக் குழந்தைகளையும் போல் பெற்றோரின் பங்கு உண்டு. ஆனால் அவள் மட்டும் ஜென்ம பாவத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டாள். அருள் நிறைந்தவளாய் (லூக் 1: 28), அழகில் மிதந்தவளாய் உலகில் உருவெடுக்க இறைவன் சித்தம் கொண்டார். அவளே அமல உற்பவி. இந்த அமல உற்பவத்தின் மறையுண்மையை தொடக்க நூலிலே மறைபொருளாக எம்மால் கண்டுணர முடிகிறது. “உனக்கும் பெண்ணுக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம். அவர் உன் தலையை நசுக்குவார்...” (தொ.நூல் 3: 15). கீழ்படியாமையால் ஆதாம் கடவுளின் கட்டளையை மீறி பாவம் செய்தான். பாவம் விளைந்தது. “ஒரே மனிதனால் பாவமும் பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது” (உரோ5:12).

இப்பாவத்தில் இருந்த மனுக்குலத்தை மீட்டெடுக்க, சித்தம் கொண்ட இறைவனின் மீட்புப் பாதையில் தன்னை அடையாளங் கண்டு கொண்டதன் விளைவாக அவள் “நாமே அமல உற்பவம்” என சுட்டிக்காட்டுகிறாள். பெர்னதெத் என்கின்ற சிறுமிக்குத் தோன்றிய அன்னையிடம் “அம்மா” தங்கள் பெயர் என்ன என்று கேட்டதற்கு அன்னையின் பதில் “நாமே அமலோற்பவம்”. தன்னில் இருப்பதும் இயங்குவதும் ஆண்டவரின் அருங்கொடையன்றி வேறல்ல என்பதனை உணர்ந்த அன்னை “வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்துள்ளார்” (லூக் 1: 46). என தன்னில் இறைத்திட்டத்தை புரிந்து கொண்டாள்.

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த யஸ்ரின் எனும் திருச்சபை பிதாவானவர் மரியாளை ஏவாளுடன் ஒப்பிடுகிறார். இறைவன் தந்த அருள்வாழ்வு ஏவாள் மூலமாக அழிக்கப்பட்டதாகவும், இரண்டாவது ஏவாளாகிய மரியாள் மூலமாக அவ்வருள் மீண்டும் மனுக்குலத்திற்கு கிடைப்பதாகவும் எடுத்துரைக்கின்றார். “ஏவாள் பாம்புருவான கெட்ட தூதனின் வார்த்தையை நம்பினாள். கன்னிமரியாள் கபிரியேல் தூதரின் வார்த்தையை நம்பி விசுவசித்தாள். ஒரு பெண் வார்த்தையை நம்பி இழைத்த தீமையை மற்றொரு பெண் வார்த்தையை நம்பி பெற்றுக் கொண்டாள் (De Carne Christi). “ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிச்சு மரியாளின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது” (De Haeres V -19). இவ்வாறாக புனித ஜஸ்ரின், தேர்த்துல்லியன், புனித இரேனியூஸ் போன்றவர்கள் ஏவாளோடு புனித மரியாளை ஒப்பிட்டு அமல உற்பவ மறையுண்மையைப் போதிக்கிறார்கள். மரியாளின் அமல உற்பவம் பற்றிய உண்மையை தெளிவுற எடுத்தியம்பியவர் பிரான்சிஸ்கன் சபைத் துறவி அருளப்பர் டன்ஸ் ஸ்கொட்டஸ்... 15

# உண்மை உறைக்கும்



# என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே!

## இளையோரே விழித்திரு!

நாம் ஒவ்வொருவரும் ஒரு புதிய யுகத்துக்குள் இருக்கிறோம். அதுதான் சாதகமும் பாதகமும் நிறைந்த நவீன தொழில் நுட்பம். நிச்சயமானவற்றை தவிர்த்து, நிச்சயமற்றவற்றுடன் காலத்தை நகர்த்தி கொண்டிருக்கிறோம். இவ்வேளையிலே தான் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் ஆன்மீக மேம்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து எம் தாயாம் திருச்சபை இவ்வாண்டை இளையோருக்குரிய ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது.

திறமைகளின் ஊற்றே இளையோர். இன்று எம்மில் எத்தனைபேர் திறமைகளை சரியான வழியில் பயன்படுத்துகின்றோம்,? எத்தனை பேர் ஆண்டவ ருக்காய் எம்மை அர்ப்பணிக் கின்றோம்? அவ்வாறு அளவுக்கு அதிகமாக ஆண்டவரை நேசிக்கும் ஆராதிக்கும் இளையோர் இன்று மிகவும் அரிதிலும் அரிது என்றே கூறலாம். No one is bussy here priority is everything என்று ஒரு ஆங்கில முதுமொழி உண்டு.



வேலைப்பழு அதிகமானோர் என்று இங்கு யாருமில்லை, முன்னுரிமை தான் அதிகம் என்பது பொருள். வேலைப்பழு என்னும் சாக்குபோக்குகளுக்குள் ஒளிந்து கொண்டு இன்று பெற்றோர் பெரியோரின் ஆலோசனைகளை அவமதித்து கையடக்க தொலைபேசி என்னும் சங்கிலியால் கட்டப்பட்ட அப்பாவி பிராணிகளைப் போல் அலைமோதுகின்றோம். நீதி மொழியாகமத்தில் இவ்வாறு கூறப்படுகிறது. நீதிமொழி 1:8-9 பிள்ளாய், உன் தந்தை தந்த நற்பயிற்சியை கடைப்பிடி உன்தாய் கற்பிப்பதை தள்ளிவிடாதே அவை உன் தலைக்கு அணிமுடி உன் கழுத்துக்கு மணிமாலை. நாம் இன்றைய சமுதாயத்தில் பல்வகையான சவால்கள் மத்தியில்



வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்சவால்களை தாண்டி முன்னோக்கி நகர்வதற்கு நாம் ஒவ்வொருவரும் எம் பெற்றோரின் அறிவுரைக்கு செவிமடுப்போம். இறைவார்த்தையை வாழ்வாக்கி ஆன்மீகத்துக்குள் ஆண்டவருக்குள் வாழ்வோம். ஆனால் இன்று நாம் இவ்வாறு வாழ தவறுகிறோம். காரணம் என்னவெனில் தகவல் தொழில் நுட்பத்தின் அபரீதமான வளர்ச்சி அவற்றிலிருக்கும் ஆயிரம் நன்மைகளை விடுத்து அதிலிருக்கும் தீமையானவற்றில் எம் பொன்னான நேரத்தை வீணடிக்கின்றோம். எம்மில் நித்திரை விட்டு எழுந்தவுடன் எத்தனைபேர் இன்று கையடக்க தொலைபேசியுடன் கண் விழிக்கின்றோம். ஆனால் ஆன்மீக சிந்தனைப்படி இறைவனை தொழுது எழுவதே ஒரு கிறிஸ்தவ குழந்தையின் தலையாய கடமையாகும். எம்முடைய



வாழ்க்கையை வேதம் ஒரு புகைக்கு ஒப்பிடுகிறது. அனைத்தும் மாயையாக அவசியமற்றதாக இருக்கும் விடயங்களுடன் நாம் பிண்ணிப் பிணைந்துள்ளோம். விசேடமாக இளையோரே இவற்றிற்கு அடிமையாகியுள்ளார்கள். இவற்றிலிருந்து விடுதலைபெற தூய பவுலடியார் கூறுவது என்ன என பார்ப்போம். (1தீமத் 4:1-3) நீ இளைஞனாக இருப்பதால் யாரும் உன்னை தாழ்வாக கருதாது இருக்கட்டும்.... இளைஞர் தம் வாழ்வை மாசற்றதாய் காத்துக் கொள்வது எப்படி இறை வார்த்தையை கடைப்பிடிப்பதாலன்றோ?

குற்றமிழைக்காதவர் என இவ்வுலகில் யாருமில்லை. ஆலயம் செல்ல எம் கிறிஸ்தவ கடமைகளை செவ்வனே செய்ய நாம் பல சாக்கு போக்குகளை முன்வைக்கிறோம். தடைகளை தாண்டித்தான் நாம் வெற்றியை சுவைக்க முடியும். மேதகு அப்துல் கலாம் சொல்லி சென்றுள்ளார், வெற்றியை சுவைப்பதற்கு அவசியமாக இருப்பது தடைகள் தான். அதனால் ஒரு மனிதனுக்கு தடைகள் வாழ்வின் அவசியமாகிறது. இளையோராகிய நாம் எம் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து இறையருளை நிதமும் வேண்டி எம் சிந்தனை, சொல், செயல்களை எல்லாம் இறைவனுக்குள் சங்கமமாக்குவோம்.

**உள்ளுவதெல்லாம் உயர்வுளல் என்னும் கூற்றுக்கு அமைய வாழ்வோம்**

**ஆக்கம்: அருட்சகோதரி ராணி எக்னஸ்**

## மனிதனின் வாழ்நாள் குறைந்து கொண்டே போகிறது

தொகுப்பு: கலாபூஷனம் புலவர் அரியநாயகம் J.P. நெடுந்தீவு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆதாமின் | வாழ்நாள் | 930 | அண்டுகள் | - | தொட.நூல் 5:15 |
| 2. சேத்துவின் | வாழ்நாள் | 912 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:8 |
| 3. ஏனோசின் | வாழ்நாள் | 915 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:11 |
| 4. கேனாசித் | வாழ்நாள் | 910 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:14 |
| 5. மகலலேல் | வாழ்நாள் | 895 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:17 |
| 6. ஏரோது | வாழ்நாள் | 962 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:20 |
| 7. ஏனோக்கு | வாழ்நாள் | 365 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:23 |
| 8. மத்துசேலா | வாழ்நாள் | 969 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:27 |
| 9. இலமேக்கு | வாழ்நாள் | 777 | ஆண்டுகள் | - | தொ.நூல் 5:31 |
| 10. நோவா | வாழ்நாள் | 950 | ஆண்டுகள் | - | தொ.நூல் 9:29 |
| 11. சேம் | வாழ்நாள் | 600 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:10-11 |
| 12. அர்பகசாது | வாழ்நாள் | 460 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:12-13 |
| 13. செலவாகு | வாழ்நாள் | 460 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:14-15 |
| 14. ஏபேர் | வாழ்நாள் | 664 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:16-17 |
| 15. பெவரு | வாழ்நாள் | 239 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:18-19 |
| 16. இரயு | வாழ்நாள் | 239 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:20-21 |
| 17. செருக | வாழ்நாள் | 230 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:22-23 |
| 18. நானோர் | வாழ்நாள் | 148 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:24-25 |
| 19. தெராகு | வாழ்நாள் | 205 | ஆண்டுகள் | - | தொ.நூல் 11:32 |
| 20. ஆபிரகாமின் | வாழ்நாள் | 175 | ஆண்டுகள் | - | தொ.நூல் 25:7 |
| 21. ஈசாக்கு | வாழ்நாள் | 180 | ஆண்டுகள் | - | தொ.நூல் 35:28 |

இது பழைய ஏற்பாட்டிற்கான மக்களின் வாழ்நாட்கள். இது குறைந்து நூற்றுக்குக் கீழே வந்துவிட்டது. நம் வாழ்நாள் பற்றி திருப்பாடல்கள் அதி. 20 இல் எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே; வலிமை மிகுந்தோர்க்கு எண்பது. அவற்றில் பெருமைக்குரியன துன்பமுமம: துயரமுமே!



லில்லி நல்வாழ்வு முதியோர் இல்லம்,
152 கோப்பாய் தெற்கு, யாழ் கோப்பாய்.




## கடவுள் மனசு

குறைவுள்ள குழந்தையைப் பெற்றெடுத்த அந்த நொடியில் கடவுளே கதிகலங்கிப் போகிறார்: எப்படி இக்குறையைக் கரையேற்றப் போகிறேன்? அக்கறை கொண்டோரிடம் எடுத்துச் சொல்கிறார். அதை வளர்த்தெடுக்க அதிமிகப் பொறுப்பான பெற்றோரைத் தேடுகிறார்; கண்டடைகிறார்; கொடுக்கிறார். குழந்தையை வளர்த்தெடுக்க மனசு வேண்டும். குறைவுள்ள குழந்தையை வளர்த்தெடுக்க பெரிய மனசு வேண்டும். அத்தகைய மனசுக்காரர்கள் சாமானிய மக்கள் அல்ல; பூமியின் சாமிகள்! தியாகத்தின் திரு உருவங்கள்! கடவுளின் கால் தடங்கள்! புனித அன்னாள் மனநலம் குன்றியோர் பள்ளி ஆண்டு விழா நேரம் அது. குறையான குழந்தைகளின் நிறைவான கலை நிகழ்ச்சிகள் 26.03.2011 அன்று நடந்து கொண்டிருந்தது. அதில் பேசினார் மறைமாவட்ட ஆயர் அவர்கள். அப்போது அவர் சொன்ன நிகழ்வு இது;

வெகு சமீபத்தில் ஒரு குடும்பத்தைச் சந்தித்தேன். இருவரும் அரசுப் பணியாளர்கள்; நல்ல சம்பளமும் கூட. ஆனால் அவர்களது ஆசை மகளோ.... டவுன் சின்ட்ரம் பேபி.

"கடவுள் கொடுத்த கொடை அது என்று எண்ணி பொறுப்போடு வளர்த்தார்கள். அந்த ஜோசப் குடும்பத்தார். இப்போது அது பதினைந்து வயதுக் குழந்தை. அந்தக் குழந்தைக்கு வீடுதான் உலகம்! உலகம் தான் வீடு!"

அவர்களது மனநிலையைக் கண்டறிய கேள்வி ஒன்றைக் கேட்டேன்;

"இந்தக் குழந்தை உங்களுக்கு சுமையாக இல்லையா? இந்த மகளால் என்ன பயன்?" கண்ணீர் கனிவோடு அவர்கள் சொன்னார்கள்: "ஆயர் அவர்களே! கடவுள் எங்களுக்குத் தந்துள்ள சிறப்பான குழந்தை இது! இக்குழந்தை எங்களுக்குச் சுமையல்ல; சுகம்!" தொடர்ந்தார்கள்;

"நாங்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்குக் கிளம்பும் முன்பாக இவளிடம் தான் ஆசீர் வாங்கிச் செல்கிறோம். அவளும் எங்களை நன்றாக ஆசீர்வதித்து அனுப்பி வைக்கிறாள். எங்களது அன்றாட உணவோடு அனுதின ஆசீரையும் தருவது இந்தக் குழந்தைதான்!" நிகழ்ச்சியை விளக்கிவிட்டு ஆயர் சொன்னார்கள்: "கடவுள் பல சமயங்களில் ஆசீரையும் அருளையும் நேரடியாகத் தருவதில்லை; இக்குழந்தைகள் வழியாகத்தான் கொடுக்கிறார். இந்த வளாகத்திலே குறையுள்ள குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று மறக்காமல் ஆசீர்பெற்றுச் செல்லுங்கள்!"

# கிறிஸ்தவர்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்கள்

**(யாழ்மாகாண அமல மரித் தியாக சபையினருக்கும், அவர்களின் சபையில் அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினருக்கும் அருட்தந்தை கலாநிதி ஜெராட் டீ ரொசய்ரோ அ.ம.தி. அவர்களால் ஒக்டோபர் மாதம் 28ம், 30ம் திகதிகளில் ஆற்றப்பட்ட உரைத் தொகுப்பு)**

## முகவுரை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபையின் நற்செய்திப்பணியின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உலகில் வாழும் அனைத்துக் கிறிஸ்தவருக்கும் உணர்த்தவும், கிறிஸ்தவர்களில் நற்செய்திப் பணிக்கான ஆர்வத்தைத் தூண்டவும் இவ்வருடம் ஐப்சி மாதத்தை நற்செய்திப்பணி சிறப்பு மாதமாக அறிவித்தார். இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர், 1919. நவம்பர் 30, திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்கள் Maximum Illud, எனும் சுற்றுமடலை வெளியிட்டதை, இவ்வருடம் நவம்பர் மாதம் 30ம் நாளில் மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் நினைவு கூருவது திருத்தந்தையின் இந்த அறிவிப்பின் பின்புலமாகும்.

Maximum Illud எனும் இச்சுற்றுமடல் திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களால் வெளியிடப்பட்ட திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றியதாகும். அன்றைய உலகளாவிய மக்கள் சமூகத்தின் வாழ்வியல் நிலையை கவனத்தில் கொண்டு, திருச்சபையின் நற்செய்திப் பணியின் இயல்பையும், தன்மையையும், போக்கையும் அனைத்து நற்செய்திப் பணியாளருக்கும் அறிவுறுத்துவதற்காக இதனை வெளியிட்டார். இச்சுற்றுமடல் திருச்சபையின் நற்செய்திபணி பற்றிய தாய் ஏடாகும். கடந்த நூறுவருடங்களில் வெளியிடப்பட்டுள்ள திருச்சபையின் நற்செய்திப்பணி பற்றிய ஏடுகளுக்கு இவ்வேடு இலக்கண வரம்பாய் அமைந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது அறிவிப்பில் கூறும் செய்திகளை அறியும் முன்னர் திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களின் படிப்பினைகளை தொகுத்தறிந்து கொள்வோம்.

### திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களின் படிப்பினைகள்

அ) முதலாம் உலக யுத்தம் முடிவுற்று, அதன் விளைவுகள் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலம். நவீனத்துவ சிந்தனை வளர்ச்சி பெற்றுவந்த காலம். மேற்கத்தேய துறவறச் சபையினர் காலனித்துவ ஆட்சியாளர்கள் கால்பதித்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டுவந்த காலம். அப்பின்னணியில் காலனித்துவ ஆட்சியாளரது நாடுகளின் எல்லை விரிவாக்க மனப்போக்கும், மக்களின் நிலவளத்தை தன்வயமாக்கும் போக்கும், மக்களின் கலாச்சாரம், வாழ்வியல் போக்கு, மக்களின் சமய நம்பிக்கைகளை மதியாக தன்மையும் போன்றவை நற்செய்தியாளருக்குரிய மனப்போக்கும், தன்மையும், மறைதூதுப்பணியின் நோக்கமும், போக்குமாகாது என்பது திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களின் முதல் அறிவுறுத்தலாகும்.

ஆ) எனவே, "திருச்சபை எந்த இன மக்களுக்கும் அந்நியமானதல்ல; மக்கள் நலநோக்குடன், மக்களின் வாழ்வியல் கூறுகளுக்கு முன்னுரிமை அளித்து, இயேசுவின் அன்பால் தொடப்பட்டு, ஆட்கொள்ளப் பட்ட அனுபவத்துடன், தனது தூய்மையான நம்பிக்கை வாழ்வாலும், நற்செயல் களாலும் நற் செய்திப்பணி" (திப. 9:17; 1கொரி. 15:9-10) ஆற்றப்பட வேண்டும் என்று திருச்சபை யின் நற்செய்திப்பணிக்கு ஓர் புதிய வடிவத்தை அளிக்க முயன்றார்.

இ) திருச்சபையின் நற்செய்திப்பணி திருமுழுக்கின் போது கிறிஸ்தவர்கள் முதன்முறை அறிக்கையிட்ட நம்பிக்கையில், நம்பிக்கையால் பிறந்தது. அதனால் திருச்சபையின் நற்செய்திப்பணி கிறிஸ்தவர்களுக்கு ஓர் தேர்வுப்பணி அல்ல என்றார். மாறாக, அது அவர்களது இயல்பு வாழ்க்கைப் பணியாகும். ஒவ்வொரு நாட்டு கிறிஸ்தவ மக்களும் நாளும் அவரவர் நாட்டு மண்ணில் தம் விசுவாசத்தை வாழ்வாக்குவதே கிறிஸ்தவ நம்பிக்கையை கலாச்சாரமயமாக்கும் வழியாகும். அதனால் கிறிஸ்தவ சமூகம் அந்நியத்தன்மை நீங்கிய மண்ணின் மக்களின் திருச்சபையாகும் என்று தெளிவுபடுத்தினார்.

உ) திருச்சபையின் நற்செய்திப்பணி கத்தோலிக்க தன்மை கொண்டது. கத்தோலிக்க தன்மை என்பது திருத்தந்தையின் நோக்கில் நிலைப்பிடிப்பு, நிலசுவிகரிப்பு அல்ல. மாறாக, கத்தோலிக்க தன்மை என்பது வரையறைகள், வரம்புகள் கடந்து, அனைத்தையும், அனைவரையும் பரந்து நோக்கும் மனப்போக்கை உணர்த்துகிறது (எசயா.49:6; தானி.7:14; மத். 20:1-6; மத.22:1-14; மத்.25:31-46). அதாவது "யாதும் ஊரே யாவும் கேளீர்" என்ற தமிழ் பண்பாட்டுத் தன்மையும். பொருளும் கொள்ளலாம்.

ஊ) திருச்சபையின் நற்செய்திப்பணி சுதேச மக்களுக்கு, மக்கள் மத்தியில் ஆற்றப்படும் ஒன்றென்பதால், மேலைத்தேய மறைபரப்பாளர்களை மக்களின் தாய்மொழியைக் கற்றுக் கொள்ளவும், அவர்களது கலாச்சாரப் பாரம்பரியங்களை அறிந்து, புரிந்துகொண்டு மண்ணுக்குரிய மக்களாகப் பணிபுரியவும் தூண்டுதலளித்தார்.

எ) மேலும், சுதேச திருச்சபைகள் நற்செய்திப்பணியின் அகமாகவும், விளைநிலமாகவும் இருப்பதால், சுதேச கிறிஸ்தவர்களின் நற்செய்திப் பணிக்கான ஆர்வம், ஊக்கம், ஈடுபாடு, அர்ப்பணிப்பு என்பன அவசியம் என்றார் (எபே. 5:25). இதனைச் செவ்வனே செய்வதற்கு சுதேச நற்பணியாளர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர்கள் உருவாக்கம் இன்றியமையாததாகும். சுயமொழி, கலாச்சாரம், அறிந்த அவர்களால் மண்ணின் பணியாளராகலாம். மக்களுக்குப் பணிசெய்து அவர்களால் மண்ணோடு மறையலாம். அவர்கள் நாடுகடத்தப்படுவதற்கு வாய்ப்பில்லை. சுதேசிகளிலும் நற்செய்திப்பணி அல்லது மறைபரப்பு ஆர்வம் வளரும்; நற்செய்திப் பணிக்கான அழைத்தல் தோன்றும். இவை திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களின் தூரநோக்கு அறிவுரைகளாகும்.

ஏ) சுதேச குருக்கள் சொந்த மண்ணில் பிறநாட்டவராகும் நிலையும், தங்களைத் தனிமைப்படுத்தி தனிக்குழுக்களாக வாழ்வதும், துறவறச்சபைகள் தங்களுக்கென்று நிலம், தனிப்பணி என வரையறையிட்டு, கூட்டுப்பொறுப்பின்றி செயல்படுவதும் தவிர்க்கப்பட வேண்டியதாகச் சுட்டிக்காட்டினார்.

ஐ) நற்செய்திப் பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, மக்களோடு வாழ்ந்து, நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்து மறைந்த புனிதர்கள் பிரான்சிஸ் சவேரியார், பாத்லோமோ டி லாஸ் போன்றவர்களை நற்செய்திப் பணிக்கு எடுத்துக்காட்டுகளாக நினைவு கூர்கின்றார்.

இவ்வாறு, நற்செய்திப் பணியில் முதற்கண் ஓர் சமூக, வரலாற்று ஆய்வின் தேவை, மக்களின் மொழியைக் கற்று, அவர்களின் கலாச்சார வாழ்வியலைப் புரிந்து கொள்வதன் அவசியம், சுதேச மக்களில் நற்செய்திப் பணிக்கான ஆர்வத்தைத் தூண்டுதல், சுதேசிகளை நற்செய்திப்பணிக்கு உருவாக்குதல் ஆகிய தூரநோக்குக் கொண்ட திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்களின் படிப்பினைகளை இரத்தின சுருக்கமாக அறிந்த நாங்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அளிக்கும் நற்செய்திப்பணி சிறப்புச் செய்தியின் தொகுப்பைக் காண்போம்.

### திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்புச் செய்தி

அ) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "நற்செய்தியின் மகிழ்ச்சி" எனும் தமது சுற்றுமடலில் நற்செய்திப் பணியாளர்களில் காணப்பட வேண்டிய இன்றியமையாத முதன்மைப் பண்பாக இயேசு அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார். மூவொரு கடவுளின் பெயரால் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் நற்செய்தியாளர்கள் என்ற புரிந்துணர்வுடன் "இயேசுக் கிறிஸ்துவுடனான ஒரு புதுப்பிக்கப்பட்ட சந்திப்புக்கு அனைத்துக் கிறிஸ்தவர்களையும்" அழைத்த திருத்தந்தை, "நற்செய்திப் பணிக்கான சிறப்புச் செய்தியிலும்", முதற்கண் இயேசு கிறிஸ்துவில் அறிக்கையிட்ட நம்பிக்கையில் நற்செய்திப் பணியின் தன்மையை அறிந்து கொள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் பணிக்கிறார்.

அன்று, இயேசு தாம் விரும்பியவர்களை அழைத்து, தம்மோடு இருக்கவும், நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்படவும் அவர்களை பயிற்றுவித்தார் (மாற்.3:14). ஆயினும், சீடர்கள் கலிலேயாவில் உயிர்த்த இயேசு கிறிஸ்துவை சந்தித்த பின்பே (மத்.26:32) அவர்களில் இயேசு அவர்களை விரும்பி அழைத்த நோக்கம் செயல்வடிவம் பெற்றது. இயேசுவின் படிப்பினைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழவும், நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிக்கவும், நம்பிக்கை கொண்டோரை அறிவூட்டவும், பிறரன்புப் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடவும் ஆரம்பித்தார்கள். உயிர்த்த இயேசுவை சந்தித்ததால், இயேசு அவர்களைச் சந்திப்பதற்கு அவர்கள் காட்டிய திறந்த மனப்பான்மையால் அவர்களில் ஏற்பட்ட மனமாற்றமே அவர்களில், அவர்களால் இயேசுவின் நற்செய்திப்பணிக் கனவு நனவாகுவதற்கு காரணமாயிற்று. இது இன்றும் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களில், கிறிஸ்தவர்களால் வாழ்விக்கப்பட வேண்டும் என்பது திருத்தந்தையின் வாஞ்சையாகும்.

நற்செய்திப்பணி திருச்சபையின் முதன்மைப் பணி என்பதால், அதற்கான ஆர்வமும், ஈடுபாடும், அர்ப்பணமும் குறைந்திட, செயலிழந்திட இடமளிக்கக் கூடாதென கிறிஸ்தவர்களை விழிப்பூட்டுகிறார். ஆகவே, முதற்கண் கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வின் அடித்தள அனுபவத்தில் கிறிஸ்தவர்களின் வாழ்வு வேரூன்றி உள்ளதா என்ற தேடலில் ஈடுபாடுகொள்ள திருமுழுக்கு வழியாக தம்மை அர்ப்பணித்தவர்களை திருத்தந்தை அழைக்கிறார். கிறிஸ்துவுடன் இணைந்திருப்பவர்கள் புதிதாகப் படைக்கப்பட்டவர்கள். அவர்களை கிறிஸ்துவின் பேரன்பு ஆட்கொண்டுள்ளது (2கொரி. 5:14-21). இவ்வனுபவமே நற்செய்திப்பணிக்கு அழைப்புப் பெற்ற கிறிஸ்தவர்களின் அடித்தள அனுபவமாகிட வேண்டும்.

ஆ) நற்செய்திப் பணியும் ஒருமை வாழ்வும் நற்செய்திப்பணி அழைப்பைப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும். தொடக்க கிறிஸ்தவர்களின் வாழ்வு இதற்கு எடுத்துக்காட்டாகும். ஒருமனத்தவராய் இறைவார்த்தையைப் படிப்பதும், திருத்தூதர்களின் படிப்பினைகளைக் கேட்பதும், கூடிச்செபிப்பதும், அப்பம் பிட்டுண்பதும், பிறரன்புப் பணிகளில் ஈடுபடுவதும் அவர்கள் வாழ்ந்த முறையாகும் (திப. 2:41-45; 4:32). இன்றும் கிறிஸ்தவர்கள் தனித்தும், குடும்பமாகவும், குழுவாகவும் இவ்வாழ்க்கை மறைபைப் பின்பற்றுவதன் வழியாகவே தமக்குள் ஒருமை காத்து, நற்செய்திப் பணி அழைப்பை தம் வாழ்வாக்கலாம். ஒருமைப் பண்பு பேணப்படாது போனால், அது நற்செய்தி அறிவிப்புக்கும், வாழ்வுக்கும் எதிர்மறை சாட்சியமாகிடும் என திருத்தந்தை கிறிஸ்தவர்களை எச்சரிக்கின்றார்.

இ) நற்செய்திப்பணி அழைப்பைப் பெற்ற கிறிஸ்தவர்கள் பணியாளருக்குரிய மனநிலையைப் பெறவேண்டும் (மாற். 9:33; 10:44). கிறிஸ்தவ நம்பிக்கை வளர்ச்சியடையவும், நம்பிக்கையில் உறுதியடையவும் பணிமனத்துடன் செய்யும் நற்செய்தி அறிவிப்பு அவசியம் என்பது திருத்தந்தையின் கருத்தாகும். நற்செய்தி அறிவிப்பை முன்னெடுப்பது, திருவிவிலியப் பகிர்வு செய்வது, நம்பிக்கை கொண்டோரை அறிவூட்டுவது, விவிலிய மறைக்கல்வியை பல்வயதினருக்கும் அளிப்பது போன்ற வழிகளால் கிறிஸ்தவர்களின் நற்செய்திப்பணி ஆர்வத்தை குன்றிலிட்ட தீபம் போலாக்கிட திருத்தந்தை அழைக்கிறார் (உரோ. 10:15). இதற்கு கிறிஸ்தவர்கள் பல்நிலைகளில் உருவாக்கம் பெறல் வேண்டும் என்கிறார்.

உ) நுகர்வுக் கலாச்சாரத்தின் விளைவால் ஏற்பட்டுள்ள போதாது என்ற மனநிலையும், பிறருக்குரியதை சுரண்டும் போக்கும், பின்நவீனத்துவத்தின் தாக்கமும் கிறிஸ்தவர்களிடையே சமநிலையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் சமூகக் கண்ணோக்கில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால் கிறிஸ்தவ சமூகம் ஒரு மூடப்பட்ட சமூகமாக வளரும் நிலை ஏற்பட்டுள்ளதாக திருத்தந்தை சுட்டிக்காட்டுகிறார். எனவே நற்செய்தி அறிவிப்புப் பணி மூலம் கிறிஸ்தவர்களில், கிறிஸ்தவர்கள் மத்தியில் மனமாற்றமும், புதுப்பித்தலும் ஏற்பட வேண்டும் என்கிறார்.

ஊ) கிறிஸ்தவர்களின் வாழ்வுக்கு சாட்சியங்களாகவும், முன்மாதிரியாகவும் புனிதர்களும், மறைசாட்சிகளும் விளங்குகின்றனர். இவர்களும் திருமுழுக்கால் பெற்ற அழைப்பை ஏற்று, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, வாழ்வின் சவால்களையும், வேதனைகளையும் நம்பிக்கையுடன் சந்தித்து, இறை இருத்தலோடு இணைந்து பயணித்து நற்செய்திப் பணியாளர்களாக மரணம்மட்டும் வழந்தவர்களாவர். இவர்கள் வாழ்வு தரும் படிப்பினைகள் கிறிஸ்தவர்கள் எமக்கு ஆதாரமாகிட வேண்டும் என்கிறார் திருத்தந்தை.

இவ்வாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது நற்செய்திப்பணிக்கான சிறப்பு அறிவிப்புச் செய்தியில் கிறிஸ்தவர்கள் திருமுழுக்கால் பெற்ற அழைப்பை ஓர் பேறாக ஏற்று வாழவும், இயேசு அனுபவத்தை தம் அடித்தள அனுபவமாகக் கொள்ளவும், நற்செய்திப் பணி வாழ்வுக்குரிய மனப்போக்கை வளர்த்துக் கொள்ள தனித்தும், குழுவாகவும் உருவாக்கம் பெறவும், தம் வாழ்வால் சாட்சிகளாயிருக்கும் புனிதர்கள், மறைசாட்சிகளை முன்மாதிரியாக ஏற்கவும் நம்மை அழைக்கிறார்.

## முடிவுரை

திருத்தந்தையின் இச்சிறப்புச் செய்தி நூறு வருடங்களுக்கு முன்னர் திருத்தந்தை 15ம் பெனடிக் அவர்கள் கூறிய படிப்பினைகளை நினைவுகூரச் செய்வது போல, நம்மை இன்றைய சமூக, வரலாற்று பின்புலத்தை அறிந்து தெளிந்து, யதார்த்த போக்குடனும், எதிர்கால நோக்குடனும், இந்நூற்றாண்டில் நற்செய்தி பணியாளர்களாக...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**"நான் உன் ஆயன் உன்னை பசும்புல் வெளிக்கு அழைத்துச் செல்வேன். நீர்நிலையில் இளைப்பாற்றுவேன்"**

# திருவருகைக் காலத்தில் திருமுழுக்கு யோவான்



– அம்புறோஸ் பீற்றர் –

திருவருகைக் காலத்தில் புறம்தள்ள முடியாத ஒரு கதாபாத்திரமாக திருமுழுக்கு யோவான் விளங்குகின்றார். மனித குல மீட்பின் வரலாற்றில் இயேசுவின் பிறப்பு எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அதே போன்று இயேசுவின் பிறப்பிற்கு ஆறுமாதங்களுக்கு முன் பிறந்த யோவானின் பிறப்பும் தனிச் சிறப்பு வாய்ந்தது. இவர் இயேசு விண்வழியை சீர்படுத்த வந்த செம்மல், நேர்மையும் துணிவும் நெஞ்சுறுதியும் இயேசுவே உலகின் மீட்பர் என்ற உறுதிப்பாடும் கொண்டவர். நற்செய்தியில் காணப்படும் கதாபாத்திரங்களில் மிகவும் வித்தியாசமான கதாபாத்திரங்களில் திருமுழுக்கு யோவான் என்றால் அது மிகையல்ல.

இயேசுவின் முகம் சாந்தம் கொண்ட முகம் கருணை கொண்ட கண்கள் நீண்ட தொங்கலாடை, பார்த்தாலே பரவசமான தோற்றம். ஆனால் திருமுழுக்கு யோவான் அப்படியல்ல. கரடுமுரடான முகம், படியாத தலைமுடி, கண்கள் இரண்டும் நெருப்பு நாக்கு தீப்பிழம்பு போல் சுடும் தன்மை, உடுத்தியது ஒட்டக மயிராடை, உணவு காட்டுத் தேனும், வெட்டுக்கிளியும். ஆனால் அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் எல்லாம் கடும் வார்த்தைகளாக உள்ளன. ஒரு கவிஞன் அழகாகச் சொல்லுவான் கடவுள் ஒரு கணம் இடியென இடிக்கிறார். அடுத்த கணம் மழையெனப் பொழிகின்றார். கடவுளுக்கு இரண்டு முகம் ஒன்று நீதி முகம், அடுத்தது இரக்க முகம் நீதி முகத்தில் இடிக்கிறார். இரக்கமுகத்தில் பொழிகின்றார். பொழியும்போது இனிக்கிறது. அவர் இடிக்கும்போது கசக்கிறது.


இதோ நான் இறங்கி வருவேன் என் மக்களை மீட்டு பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திற்கு கொண்டு செல்வேன் என்று கடவுள் சொல்லும் போது இனிக்கிறது. என் கட்டளைகளைப் கடைப்பிடித்து அதன்படி நடவுங்கள் இல்லையென்றால் என் கோபம் உங்களுக்கு எதிராக வரும் என்று சொல்லும்போது கசக்கிறது. "நான் உன் ஆயன் உன்னை பசும்புல் வெளிக்கு அழைத்துச் செல்வேன். நீர்நிலையில் இளைப்பாற்றுவேன் என்று கடவுள் சொல்லும்போது இனிக்கிறது. ஏழையை வஞ்சிக்காதே ஆதரவின்றி இருப்பவர்களை நீதி மன்றத்தில் சிறுமைப்படுத்தாதே அவர்களுக்காக நான் வாதாடுவேன்" என்று கடவுள் சொன்னால் கசக்கிறது. "ஆறுதல் கூறுங்கள் என் மக்களுக்கு கனிமொழி கூறுவேன்" என்று ஆண்டவர் கூறும்போது இனிக்கிறது. மரக்கலை சிறிதாக்கி எடைக்கல்லை கனமாக்கி கள்ளத்தராசால் மோசடி செய்கிறீர்கள். வெள்ளிக் காசிற்கு ஏழைகளையும் இரு காலணிக்கு வறிய மக்களையும் வாட்டுகிறீர்கள் என குற்றம் சாட்டும்போது கசக்கிறது.

திருமுழுக்கு யோவானின் குரல் கடவுளின் இடிக்கும் இடி அவர் கடவுளுடைய நீதி முகத்தின் பிரதிபலிப்பு. அவர் பேச்சும் செயலும் சற்று கசக்கும்தான். கருத்துக் கூட கசக்கத்தான் செய்கிறது. அதற்காக அதைத் தூக்கியா எறிந்துவிடுகின்றோம். சாப்பிட்டு நம் நோயை குணமாக்கிக் கொள்கிறோம். அல்லவா திருமுழுக்கு யோவானின் வார்த்தைகள் கூட ஒரு கசப்பு மருந்து அதை சாப்பிட்டு நம் நோயை குணமாக்கிக் கொள்வோம். ஏரோது அவரது தலையை வெட்டியதால் திருமுழுக்கு யோவான் இறந்து விடவில்லை. தலைமுறை தலைமுறையாய் இங்கு வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார். தப்பான ஒன்றை உலகமே சரி என்று சொன்னாலும் நீதிக்காக ஆங்காங்கே எழும்பும் சின்னச் சின்னக் குரல்களில் யோவான் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றார்.

திருமுழுக்கு யோவான் தனது போதனையில் முக்கியமாக வலியுறுத்தியது மனமாற்றம். மாற்றம் ஒன்றே மாறாத நிலைப்பாடு கொண்டது. அது நமது மனமாற்றமாக இருப்பதே சிறந்தது. தன்னை மாற்றிக் கொள்ளாத அல்லது மாற்ற மறுக்கின்ற எந்த ஒரு நபரையும் யாரும் திரும்பிப்பார்ப்பதில்லை. ஓர் இலையுதிர் காலத்திற்குப் பின் தன்னைப் புதுப்பிக்காத மரத்தை வனம் தன் எண்ணிக்கையில் வரவு வைப்பது கிடையாது... ஆற்று நீராலும் ஊற்று நீராலும் மழை நீராலும் தன்னை புதுப்பிக்காத நதியை மனிதன் நதி என்பதில்லை. மாற்றம் என்பது காலத்தின் கட்டுப்பாடு. இது மரத்திற்கு மட்டுமல்ல மாறாக ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்தும். மாற்றம் என்பது மிகவும் அவசியம். குறிப்பாக தன் பாவ வாழ்வில் இருந்து புண்ணிய வாழ்வு அவசியம் என்பதை திருமுழுக்கு யோவான் பறைசாற்றுகின்றார்.

மனமாற்றத்தை வலியுறுத்தும் திருமுழுக்கு யோவான் குறிப்பாக திருவருகைக் காலத்தில் நினைவு-கூரப்படுகின்றார். நமக்குள் மனமாற்றம் நிகழாதவரை இயேசுவின் இரண்டாவது வருகையை நாம் ஒருபோதும் சுவைக்க முடியாது.

# மறுத்துச் சொல்லப் பழகுவோம்



மற்றவர்கள் எந்த வேலையைச் சொன்னாலும் தட்டக்கூடாது என்றுநினைப்பவர்கள் பலர். இதனால் பல வேலைகளை இவர்கள் தங்கள் தோளில் தூக்கிப் போட்டுக் கொள்வார்கள். பிடித்த வேலை, பிடிக்காத வேலை, சின்ன வேலை, பெரிய வேலை, முடிந்த வேலை, முடியாத வேலை எல்லாவற்றையுமே ஆகட்டும்! ஆகட்டும்! என்று தங்கள் முதுகில் சுமந்து கொள்வார்கள்.

அத்துணை வேலைகளையும் ஒருவரால் எப்படிச் செய்ய முடியும்? எதைச் செய்வது? எதை முன்னால் செய்வது என்று குழம்பிக் கொண்டே இருப்பார்கள். விளைவு?

எந்த வேலையும் நடக்காது. இவர்களிடம் நம்பி வேலையைக் கொடுத்தவர்களும் இவர்கள் மீது குற்றம் சொல்வார்கள். ஏச்சும் பேச்சும்தான் மிச்சம்.

நமக்குப் பிடித்த நம்மால் செய்யக்கூடிய நமது வளர்ச்சிப் பாதைக்குப் பயன்படக்கூடிய பணிகளை மட்டும் நாம் ஏற்றுக்கொள்ளப் பழகுவோம்.

வேலைகள் அதிகமாகும்போது முக்கியமான பணிகளை மட்டுமே ஏற்றுக்கொள்வோம்.

மற்ற வேலைகளையெல்லாம் பணிவாகவும், அன்பாகவும் அதே நேரத்தில் உறுதியாகவும் மறுத்துச் சொல்லக் கற்றுக் கொள்வோம். மற்றவர்கள் மனம் புண்படாமல் மறுத்துப் பேசுவதும் ஒரு பெரிய திறமை. அந்தத் திறமையையும் பழகிப் பழகி வளர்த்துக் கொள்வோம்.

## மனித நேயம்

# மாற்றுத் திறனாளிகளும் மனிதர்களே!



மார்கழி 3

மாற்றுத் திறனாளிகளும் மனிதர்களே, அவர்களை ஏற்றுக்கொள்வது எம் மனித நேயமே, அவர்கள் தம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வலைகளை எம் உள்ளத்தில் உள் வாங்குவோம்.

மனந்திறந்து பேச முடியாத, கண் திறந்து காண முடியாத, செவி கொடுத்துக் கேட்க முடியாத, கை - கால் இயங்க முடியாத, மன நலம் இழந்த இவர்களும் மனிதர்களே.

பார்வை-யிழந்தவரை, பேச்சிழந்தவரை, கேட்கமுடியாதவரை, கை - கால் இழந்தவரை மன நலம் இழந்தவரை, மதிக்கவில்லை எனில், நம் திறமைக்கு என்ன பெருமை?

மாற்றுத்-திறனாளிகள், வாழ்வில் மாற்றம் காண உன்னத ஏற்றம் காண, உதவிடுவோம். உழைத்திடுவோம்.

எம்மனக்-கண்களை அகலத்திறப்போம், அன்புக்கரங்களை அகல விரிப்போம், அவர் தம் வாழ்வில் ஏற்றம் காண உதவுவோம், ஆடம்பரம் தவிர்த்து அமைதியில் அழுகின்ற அவர் தம் குறைகள் களைந்திடுவோம். கரம் கொடுத்து, கருணை காட்டுவோம்.

இறைவனுக்கும் அயலவருக்கும் அன்புப்பணி புரிந்திடு-வோம், அமைதியின் தூதர்களாய் என்றும் வாழ்ந்திடுவோம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்**

## எப்போதிலிருந்து கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகிறது?

கிறிஸ்து பிறப்பு விழா கி.பி 87லிருந்து கொண்டாடப்படுவதாக சொல்லப்படுகிறது. கி.பி 137இல் உரோமை ஆயர் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட கட்டளைப் பிறப்பித்ததாக திருச்சபை வரலாற்றில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. ஆனால் பிறந்த சரியான திகதி குறிப்பிடப்படவில்லை. பிறகு கி.பி 150இல் திருத்தந்தை முதலாம் ஜுலியஸ் என்பவர் கிறிஸ்து பிறப்புக் காலம் வசந்த காலமாய் இருக்கும் என்று கருதி அது அந்நிய தெய்வ வழிபாட்டுக் கொண்டாட்டத்திற்குப் போட்டியாக அமையும் என்று கருதி மார்கழி 25ம் திகதி கிறிஸ்மசைக் கொண்டாட ஆணை பிறப்பித்தார். புனித அலெக்சாண்டியா கிளமென்ட் (150-215) அவர்களின் குறிப்பிலிருந்து கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அனுசரிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. கி.பி 336இல் கொண்டாடப்பட்டதாக ரோமைப் பேரரசின் வரலாற்றுக் குறிப்பில் காணக்கிடக்கிறது.

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## திருவருகைக்காலத்தின் 1வது ஞாயிறு (01.12.2019)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் முதல் வாரத் திருவழிபாட்டை சிறப்பிக்க வந்திருக்கும் திருஅவையின் அன்பு நெஞ்சங்களே! நமது இவ்வுலக வாழ்வுக்காக எத்தனையோ ஆயத்தங்களை செய்யும் நாம் எமது நிலை வாழ்வுக்காக என்ன செய்கின்றோம்? என்பதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். திருஅவையானது கிறிஸ்து இயேசு மண்ணிற்கு வந்த கிறிஸ்து பிறப்பு விழாவை சிறப்பாக கொண்டாடவும், நாம் எதிர்நோக்கி இருக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நம்மைத் தயாரிக்கவும் அழைப்பு விடுக்கின்றது. இவ்வுலகில் நாம் இரண்டு வகையான ஆட்சிமுறைகளை நாம் காண்கின்றோம். ஒன்று இருளின் ஆட்சி மற்றயது ஒளியின் ஆட்சி. தூய பவுல் அடியார் இருளின் ஆட்சியை தூக்கி எறிந்துவிட்டு ஒளியின் ஆட்சியை நமதாக்கி கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். நாம் நமது அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் மூழ்கியிருக்கின்றோம். ஆனால் நாம் நமது வாழ்வைப் பெற இறைவனைத் தேட வேண்டும். நாம் விழித்தெழவேண்டும். ஒளியின் மக்களாக வாழ எம்மைத் தயார்படுத்தவேண்டும். இவ்வுலக வாழ்வை மட்டும் தேடியவர்கள் அழிந்து போவார்கள் என நற்செய்தி நமக்கு நினைவூட்டுகின்றது. எனவே விழித்தெழுந்தவர்களாக இறைவனை சந்திக்க தயாராகுவோம்.

**முதல் வாசகம் :** எசா 2:1-5
இறைவனின் முடிவில்லா அமைதியில் நாடுகள் அனைத்தையும் ஆண்டவர் ஒன்று சேர்க்கிறார்.

**பதிலுரைப் பாடல் :**
அகமகிழ்வோடு ஆண்டவரது இல்லத்திற்கு போவோம்.

**இரண்டாம் வாசகம் :** உரோ 13:11-14
நமது மீட்பு மிக அண்மையில் உள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும் உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** மத் 24:37-44

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

ஆண்டவரின் வருகை அனைவர்க்குமானது என்பதை கருத்தில் கொண்டு மக்கள் அனைவரையும் ஆண்டவரின் வருகைக்காக ஆயத்த நிலையில் இருக்க அறைகூவல் விடுக்கும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவிகள் யாவரும் தம் பணி வாழ்வில் ஒளி வீசிட அவர்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்

நமது நாட்டில் புதிதாக தோன்றியுள்ள அரசியல் நிலைப்பாடானது மக்களின் நலனுக்காக உண்மையும், அன்பும் நீதியும் கொண்டதாக ஒளிரவும், இருளின் ஆட்சி மறைந்து ஒளியின் ஆட்சியாக மலரவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தலைவர்கள் தம்மை அர்ப்பணித்திட அவர்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்.

சின்னஞ்சிறிய சகோதரர்கட்கு நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற இயேசுவின் கூற்றுக்கு அமைய நம்முடன் வாழும் ஏழை எளியவர்க்கும் நோயுற்றோருக்கும் எம்மால் இயன்றதை செய்யவும், இறைவனை சக மனிதர்கள் வழியாகவும், இறைவனின் படைப்புப் பொருட்கள் வழியாகவும் தன்னை வெளிப்படுத்தும் இறைவனைக் கண்டு கொள்ளவும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து ஒளியின் மக்களாக வாழவும் எங்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்.

## திருவருகைக்காலத்தின் 2வது ஞாயிறு (08.12.2019)

**வாசக விளக்கம்:** தித்திக்கும் திருவருகைக்காலத்தின் இரண்டாவது வார ஞாயிறு திருவழிபாட்டை சிறப்பிக்க வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இன்றைய நற்செய்தியின் வழியாக திருமுழுக்கு யோவான் இடிக்கும் இடியாக மனமாற்றம் பெற அழைப்பு விடுக்கின்றார். மாற்றம் என்பது மானிடத் தத்துவம். மாற்றம் ஒன்றுதான் உயிரின் அடையாளம் தன்னை மாற்றிக் கொள்ளாத அல்லது மாற்ற மறுக்கின்ற எந்த ஒரு நபரையும் யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை. ஓர் இலையுதிர் காலத்திற்குப்பின் தன்னைப் புதுப்பிக்காத மரத்தை வனம் எண்ணிக்கையில் வரவு வைப்பது கிடையாது. நாம் மனம் திரும்பும்போது இறைவன் எம்மை அரவணைத்து வழிநடத்துகின்றார். இதனைத்தான் திருவிவிலியம் எமக்கு எடுத்துரைக்கின்றது. யோவானின் அறைகூவல் நற்செய்தியை நம்புங்கள் என்பதாகும். நற்செய்தியை நம்புவது என்பது இயேசு தரும் புதிய வாழ்வை ஏற்பதாகும். புதிய வாழ்வு வாழ்வதற்கு நற்செய்தி மிகவும் அவசியம். எனவே திருவருகைக்காலத்தை நன்கு பயன்படுத்தி மனமாற்றம் பெற்றவர்களாக புதுவாழ்வை நமதாக்கிக் கொள்ள அருள்வரம் வேண்டுவோம்.

**முதல் வாசகம் :** எசா 11:1-10
நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும்.

**இரண்டாம் வாசகம் :** உரோ 15:4-9
மக்கள் அனைவரையும் கிறிஸ்து மீட்கிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவருடைய வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள் மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** மத் 3:1-12

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

"மனம் மாறுங்கள். ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது" என்ற யோவானின் அறைகூவலை ஏற்று மக்களின் மனமாற்றத்திற்காக என்றும் உழைக்கும் திருஅவையின் பணியாளர்கள் அனைவருக்கும் ஆர்வத்தையும் உறுதியையும் தூய ஆவியாரின் கொடைகளையும் வழங்கிட அவர்கள் நெஞ்சங்களில் எழுந்தருளி வாரும்.

இத்திருவருகைக்காலத்தில் நாமும் நற்செய்தியை வாசித்து சிந்தித்து பழைய வாழ்விலிருந்து புதிய வாழ்வுக்கு அடி எடுத்து வைக்கவும், ஆண்டவரை ஆவியிலும் உண்மையிலும் வழிபடும் மக்களாக நாம் வாழவும் பாவத்தைப்பற்றிய அறிவே மீட்பின் தொடக்கம் என்பதை நாம் உணரவும் எங்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்.

மனம் மாறுவதும் நற்செய்தியை நம்புவதும் திருவருகைக்காலம் நமக்குத் தரும் செய்தியாகும் இதை நாம் உணரவும், நாம் திருமுழுக்கில் பெற்றுக் கொண்ட அருளாடையை என்றும் அணிந்து வாழவும், ஏழை எளியவர்களை கண்நோக்கி எம்மால் இயன்றதை செய்யவும், ஏழைகள் முகத்தில் இயேசுவை காணவும் வேண்டிய வரங்களை வழங்கிட எம் மத்தியில் எழுந்தருளி வாரும்

## திருவருகைக்காலத்தின் 3வது ஞாயிறு (15.12.2019)

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் மூன்றாவது ஞாயிறு தின வழிபாட்டில் வாஞ்சையுடன் பங்கு கொள்ள வந்திருக்கும் அன்பின் இறைமக்களே! இன்றைய நற்செய்தியானது மூன்று முக்கிய சிந்தனைகளை நமக்குத் தருகின்றது. ஒன்று இயேசுவின் கீழ்படிதலால் விளைந்த மீட்புச் செயல் அதாவது தொடக்கப் பெற்றோரின் கீழ்படியாமையால் விளைந்த பாவத்தை தனது கீழ்படிதலினால் இயேசு நிவர்த்தி செய்தார். இரண்டாவது எமது வாழ்வில் விசுவாசம் என்ற பயிரை நாம் விதைத்தால் பொறுமையோடு இறைவனின் செயற்பாட்டிற்காக காத்திருக்க வேண்டும் பிரச்சினைகள் வரும்போது பொறுமையோடும் முழுவிசுவாசத்துடனும் செயல்பட வேண்டும். மூன்றாவது இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான் பற்றிய புகழாரம் அதாவது திருமுழுக்கு யோவான் ஓர் இறைவாக்கினர் ஆண்டவரின் தூதர் மனிதராய் பிறந்தவரில் மிகப் பெரியவர் என்பதாகும். எனவே ஆண்டவரின் ஆட்சி மண்ணில் அமையும் வரை பொறுமையோடு காத்திருந்து. இறைவாக்கினருக்குரிய பணியைச் செய்வோமாயின் முதல் வாசகம் கூறும் மகிழ்ச்சியும் வளமும் பசுமையும் எம்மிடம் வந்து சேரும்.

**முதல் வாசகம் :** எசா 35:1-6,10
கடவுளே வந்து உங்களை விடுவிப்பார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே எங்களை மீட்க வந்தருளும்.

**இரண்டாம் வாசகம் :** யாக் 5:7-10
உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் ஆண்டவரின் வருகை நெருங்கி வந்துவிட்டது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது. ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** மத் 11:2-11

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

திருமுழுக்கு யோவானைப் போன்ற துணிவுடன் இறைவார்த்தையை எடுத்தியம்பும் திருஅவையின் பணியாளரோடு ஒன்றிணைந்து இறைமக்களாகிய நாமும் இறையரசின் வருகைக்காக பொறுமையோடும், எதிர்பார்ப்போடும் காத்திருக்க வேண்டிய மனநிலையை அளித்திட எம் மத்தியில் எழுந்திருளி வாரும்

நாட்டை நேசிக்கும் மக்களும் தலைவர்களும் நாட்டின் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்கவும், இயேசுவைபோல இயற்கையோடு இணைந்து வாழவும், இயற்கை அழியாதவாறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் நாட்டையும் நாட்டின் எதிர்கால சந்ததியினரை நேசிக்கும் மக்களாக செயல்படவும் வேண்டிய நல்மனம் படைத்தவர்களாக வாழ எங்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்.

நாம் விசுவாசம் என்ற பயிரை விதைத்தால் பொறுமையோடு இறைவனின் செயல்பாட்டிற்காக காத்திருக்க வேண்டும் என்பதை உணரவும் எமது கீழ்ப்படிவுள்ள வாழ்வினால் கடவுளுக்கும் மக்களுக்கும் சான்று பகரவும் திருமுழுக்கு யோவானைப் போன்ற சிறந்த மனிதர்களாக நாம் மாறவும் விசுவாசமும் பொறுமையும் உடையவர்களாக எப்போதும் வாழவும் வேண்டிய வரங்களைப் பொழிந்திட எழுந்தருளி வாரும்.




கிறிஸ்மஸ் நாளில் ஒருவருக்கொருவர் பரிசுப் பொருட்களை அளிக்கும் பழக்கம் தொடங்கியது எதனால்? ஏன் இந்த நாளில் மட்டும் பரிசுப் பொருட்களை அளிக்கின்றார்கள் மக்கள்? புனித மத்தேயு எழுதிய நற்செய்தியின்படி, "உலகை உய்விக்கப் பிறந்துள்ள அன்னை மரியின் தவப்புதல்வராம் குழந்தை இயேசுவைக் கண்டு தரிசிக்க வந்த மூன்று ராஜாக்கள் அந்தக் குழந்தையின் முன் மண்டியிட்டு வணங்கினார்கள். பின்னர் அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பொக்கிஷங்களைத் திறந்து பொன்னும் பொருளும் பரிசுகளாக அளித்தனர்..." என்ற அந்த நாள்தான், பரிசுகள் இன்று வழங்கப்படுவதன் மூலமாகக் கருதப்படுகின்றது.

இருந்தாலும் 1800 வரையில் ஒருவருக்கொருவர் பரிசுப்பொருட்கள் வழங்கிக் கொண்ட பழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. பின்னாளில் "சாண்ட்ட கிளாஸ்" என்ற கிறிஸ்மஸ் தாத்தா அறிமுகப்படுத்தப்பட்ட பிறகுதான் கிறிஸ்மஸ் நாளின் பிரதான நிகழ்வாக பரிசுப் பொருட்கள் வழங்கும் பழக்கம் தொடங்கியது. நாமும் கிறிஸ்மஸ் காலங்களில் குழந்தைகளுக்கு பரிசில்களை வழங்கி மகிழ்விப்போம்.

# திருவருகைக் காலத்தின் வண்ணத் திரிகள்



சிறிது காலத்திற்கு முன்வரை ஆகமன காலம் என்று திருச்சபையால் அழைக்கப்பட்டு வந்த திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முன்வரும் நான்று ஞாயிற்றுக்கிழமைகளை உள்ளடக்கிய காலம். இக்காலம் எதிர்பார்ப்பையும், மகிழ்ச்சியையும், விழிப்பையும் தருகின்ற காலமாக கருதப்படுகின்றது. மேலும் வரலாற்றில் மனிதராய்ப் பிறந்த கடவுளின் மகனாகிய இயேசுவின் முதல் வருகையை நினைவுக் கூர்ந்து சிறப்பிக்கவும், உலக முடிவில் மீண்டும் மாட்சிமையுடன் வரவிருக்கின்றவரை எதிர்நோக்கி நம்மையே தூய்மைப்படுத்தி தயாரிப்பு செய்கின்ற காலமாகவும் கருதப்படுகின்றது.

திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நான்கு வண்ண மெழுகுதிரிகளை உள்ளடக்கிய ஒரு மலர் வளையம் பீடத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு திரியும், ஆயிரம் ஆண்டுகளைக் குறிக்கும். எனவே நான்கு திரிகளும் நான்காயிரம் ஆண்டுகள் இஸ்ராயேல் மக்கள் மீட்பரான மெசியாவை எதிர்பார்த்திருந்த காலங்களை குறிப்பனவாகும். ஊதா, அல்லது கத்தரிப்பூ, வண்ணம் (Purple) கொண்ட திரிகள். பாவங்களைக் குறித்து மனம் வருந்துதலையும், அதனால் செப, தவ, நோன்பிருந்து இயேசுவின் வருகைக்காக தம்மையே தூய்மைப்படுத்திக் கொண்டு காத்திருந்ததையும் குறிப்பனவாகும். எனவே இக்காலத்தை சிறிய தவக்காலம் என்றும் கருதலாம். முதல் இரண்டு வாரங்களும், மூன்றாவது வாரமும் இந்த ஊதா வண்ணத் திரிகளை ஏற்றுவர். மூன்றாம் ஞாயிறு இளஞ் சிகப்பு அல்லது ரோசா வண்ணத் திரி ஏற்றப்படும். இது இயேசுவின் வருகையை முன்னிட்டு திருச்சபை மகிழ்வதைக் குறிக்கும் அடையாளமாகும். மலர் வளையம் காலச் சுழற்சியைக் குறிப்பதாகும்.

## திருவருகைக்கால முதல் ஞாயிறு

குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின், திருவருகைக்கால அலங்கார வளையத்தை பின்வரும் செபத்தைச் சொல்லி ஆசீர்வதிப்பார். "மாட்சி நிறைந்த கடவுளே! உமது வார்த்தையினால் அனைத்தையும் தூய்மைப்படுத்தியவரே, உமது ஆசீரை இந்த அலங்கார வளையத்தின் மீது பொழிவீராக. இதனைப் பயன்படுத்தும் நாங்கள் கிறிஸ்துவின் வருகைக்காக எங்களைத் தகுந்த முறையில் தயார்படுத்தவும், உமது அளவில்லா ஆசீரைப் பெறவும் அருள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்!"

இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் இளைய குழந்தை ஊதா நிற மெழுகுவர்த்தியைப் பற்ற வைப்பார். இவ்வாரம் முழுவதும் பின்வரும் இறை வேண்டுதல் செய்யப்படும். "மாட்சி நிறைந்த ஆண்டவரே! எம்மிடையே எழுந்து வாரும் என்று மன்றாடுகின்றோம். உமது பாதுகாவலினாலும், விடுதலையினாலும் எமது பாவத்தின் அச்சுறுத்தல் அபாயத்திலிருந்து மீட்கப்படுவோம் என்று நம்புகின்றோம். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்!"



## திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு

குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின், "மாட்சி நிறைந்த கடவுளே! உமது ஒரே திருமகனின் வருகைக்காக நாங்கள் எம்மைத் தகுந்த முறையில் ஆயத்தம் செய்யும்படி எங்கள் இதயங்களில் பேரார்வத்தை ஏற்படுத்தியருளும். இதனால் அவருடைய திருவருகையின் வழியாக நாங்கள் தூய இதயத்தோடு உமக்குப் பணிபுரியும் தகுதியைப் பெறுவோம். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே, உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்!" என்று செபித்தபின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். இதனை தொடர்ந்து குடும்பத்தின் மூத்த குழந்தை இரண்டாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை, முதல் வார மெழுகுதிரியின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று பற்ற வைப்பார்.

## திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின், "மாட்சி நிறைந்த கடவுளே! எமது செபத்தை உமது செவிகள் ஆர்வத்துடன் கேட்பதாக, உமது சந்திப்பின் மூலம் வரும் அருளினால் எமது சிந்தையில் குவிந்துள்ள காரிருள் அகற்றப்பட்டு நாங்கள் தெளிவடையச் செய்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே, உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்!" என்று செபித்தபின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் தாய் மூன்றாவது ரோஸ் நிற மெழுகுதிரியையும் முதல்வார, இரண்டாம் வார மெழுகுதிரிகளையும் பற்ற வைப்பார்.

## திருவருகைக் கால நான்காம் ஞாயிறு

குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின், "மாட்சி நிறைந்த கடவுளே! உமது மாட்சியோடும், வல்லமையோடும் எம்மிடையே எழுந்தருளுமாறு உம்மை மன்றாடுகின்றோம். ஏனெனில் உமது வல்லமையே எமக்கு உதவியளிக்கும். உமது அருளிரக்கத்தினாலும், மன்னிப்பினாலும் எமது பாவத்தின் விளைவுகள் அனைத்தும் துடைத்தழிக்கப்படும். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்!" என்று செபித்த பின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். தொடர்ந்து குடும்பத்தின் தந்தை நான்காவது ஊதா நிற மெழுகுதிரியையும், ஏனைய மூன்று திரிகளையும் பற்ற வைப்பார்.

இந்த நிகழ்வுகள் நமது இதயங்களில் இறைநம்பிக்கையை ஆழப்படுத்தி, குடும்பங்களில் எப்பொழுதும் விழிப்பாயிருந்து கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் உண்மைத்தன்மையை இழந்து விடாதிருக்கவும் நமக்கு உதவுகின்றன. எனவே இந்த ஆகமன காலத்தில் அதாவது திருவருகைக் காலத்தில் நம் பாவங்களுக்காக மனம் வருந்துவதுடன் செப, தவ, நோன்பு பரிகார முயற்சிகளை மேற்கொண்டு ஒப்புரவு அருட்சாதனத்தால் நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, இயேசுவின் வருகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்.

# குடில் வகைகள்



கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பல்வேறு வீடுகளில் குடில்கள் வைக்கும் பழக்கம் உள்ளது. அப்படி நீங்களும் உங்கள் வீட்டில் கிறிஸ்மஸ் குடில் வைப்பதாக இருந்தால் பல்வேறு வடிவங்களில் குடில் அமைக்கலாம். அதனை மிக அழகாக அலங்கரித்தால் பரிசு போட்டிகளிலும் பங்கு பெறலாம்.

## குடில் மொடல்கள்

சாதாரணமாக செய்ய வேண்டுமென்றால் தரையில் புற்களைப் பரப்பி, குடில் அமைத்து, அதில் பல வண்ண பல்புகளை பயன்படுத்தி அலங்கரிக்கலாம். வீட்டில் நிறைய தொட்டிச் செடிகள் இருந்தால் அவற்றை ஒன்றாக வைத்து அதன்மேல் குடில் போன்று அமைக்கலாம். இது உண்மையில் வித்தியாசமாக இருக்கும்.

எளிமையான முறையில் குடில் அமைக்க நினைத்தால் மண் கொண்டு செய்யலாம். இன்னும் வித்தியாசமாக செய்ய நினைத்தால் வைக்கோல் பரப்பி தென்னங்கீற்றை கூரையாக வைத்து குடில் அமைக்கலாம். இருப்பதிலேயே மிகவும் சூப்பரான ஒரு வழி என்றால், அது களி மண் பயன்படுத்தி குடில் அமைப்பது தான். இப்படி செய்வதால் அதிக செலவு ஆகாமல் இருப்பதோடு இயற்கையான தோற்றத்தையும் கொடுக்கும்.

குடில் அமைக்க இடம் இல்லாவிட்டால் உங்களுக்கு ஓவியத்தில் ஆர்வம் இருந்தால் சார்ட் பேப்பரில் அழகாக குடில் இருப்பது போன்று ஓவியம் வரைந்து வைத்து அதில் குட்டியான பல வண்ண பல்புகளால் அலங்கரிக்கலாம்.

இன்னும் வித்தியாசமாக செய்ய நினைத்தால் ஐஸ்கீரிம் குச்சிகளைப் பயன்படுத்தி குடில் அமைக்கலாம். வேட்டஸிட்



ட்ரெண்ட் என்றால் அது மரக்குடில் தான் அதற்கு மரத்துண்டுகளால் குடில் அமைத்து அதில் புற்கள், வைக்கோல் மற்றும் பல்புகளைக் கொண்டு அலங்கரிக்க வேண்டும்.

என்ன செய்து பார்ப்போமா?

ஞான ஒளி GNANA OLI

# திருவருகைக் காலத்தில்



## நாம் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து செபிப்போம்....

### திருவருகை விளக்கொன்றினை உங்கள் வீட்டில் அமைத்துக்கொள்ளுங்கள்

உங்களால் இலகுவாக செய்யக்கூடிய ஒரு பொருளினால் வட்டம் ஒன்றினை அமைத்து அதற்குப் பச்சை நிறந்தீட்டவும், அதன் பின்பு ஐந்து மெழுகுதிரிகளை எடுக்கவும், அதில் மூன்றினை ஊதா நிறத்திலும், ஒன்றை இளஞ்சிவப்பு (றோஸ்) நிறத்திலும் ஏனையவற்றை வெள்ளை நிறத்திலும் அமைத்துக்கொள்ளவும். ஊதா நிற மெழுகுதிரியையும், இளஞ்சிவப்பு நிற மெழுகுதிரியையும் வட்டத்தின் மீது வைக்கவும். வெள்ளை நிற மெழுகுதிரியை வட்டத்தின் நடுவில் வைக்கவும்.

**இதனை ஏற்ற வேண்டிய முறை**

திருவருகையின் முதலாவது, இரண்டாவது, நான்காவது வாரங்களில் ஊதா நிற மெழுகுதிரியையும், திருவருகையின் மூன்றாவது வாரத்தில் இளஞ்சிவப்பு நிற மெழுகுதிரியையும், நத்தார் தின இரவு வெள்ளை நிற மெழுகுதிரியையும் ஏற்றி வைக்கவும்.

**திருவருகைக் காலத்தின் முதல் நாள் ஞாயிறு தொடக்கம் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் திருவருகைக் கால வளையத்தில் உள்ள மெழுகுவர்த்தியின் முன்பாக இதனை தியானிக்கவும்**

- தூய ஆவியானவருக்குப் பாடல்.
- திருவருகைக் கால மெழுகுவர்த்தியை ஏற்றுதல் (குடும்பத்தில் ஒருவர்).
- நாம் செய்த பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டல்.
- நான் பாவி இயேசுவே அல்லது பொருத்தமான பாடல்.
- அன்றைய நாளுக்குரிய நற்செய்தியை தாய் அல்லது தந்தை அல்லது பெரியவர்கள் வாசிக்கவும்.
- சிறிது நேரம் மௌனமாக இருந்து தியானிக்கவும்.
- ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்த இறைவார்த்தை ஒளியின் அனுபவங்களை உரத்த குரலில் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளவும்.
- தமது வேண்டல்கள் தேவைகளை இறைவனிடம் சமர்ப்பிக்கவும்.
- கர்த்தர் கற்பித்த செபத்தை ஒன்றிணைந்து கூறவும்.
- நன்றிப் பாடல் ஒன்றைப் பாடவும்
- சிலுவை அடையாளச் செபம்

| திகதி | நற்செய்தி | திகதி | நற்செய்தி | திகதி | நற்செய்தி |
|---|---|---|---|---|---|
| மார்கழி 01 | மத் 24:37-44 | மார்கழி 09 | லூக் 1:26-38 | மார்கழி 17 | மத் 1:1-17 |
| மார்கழி 02 | மத் 8:5-11 | மார்கழி 10 | மத் 18:12-14 | மார்கழி 18 | மத் 1:18-24 |
| மார்கழி 03 | மாற் 16:15-20 | மார்கழி 11 | மத் 11:28-30 | மார்கழி 19 | லூக் 1:5-25 |
| மார்கழி 04 | மத் 15:29-37 | மார்கழி 12 | மத் 11:11-15 | மார்கழி 20 | லூக் 1:26-38 |
| மார்கழி 05 | மத் 7:21,24-27 | மார்கழி 13 | மத் 11:16-19 | மார்கழி 21 | லூக் 1:39-45 |
| மார்கழி 06 | மத் 9:27-31 | மார்கழி 14 | மத் 17:10-13 | மார்கழி 22 | மத் 1:18-24 |
| மார்கழி 07 | மத் 9:35-10:1,6-8 | மார்கழி 15 | மத் 11:2-11 | மார்கழி 23 | லூக் 1:57-66 |
| மார்கழி 08 | மத் 3:1-12 | மார்கழி 16 | மத் 21:23-27 | மார்கழி 24 | லூக் 1:67-79 |

# வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்

வந்தருளும் ஆண்டவரே வந்தருளும்
வருந்துவோரின் வாழ்வை வளம்படுத்த வந்தருளும்
வசதியற்றோருக்கு வாழ்வளிக்க வந்தருளும்
வன்செயல்கள் நீங்க வல்லமையுடன் வந்தருளும்

பந்த பாசமிழந்தவர்களை பராமரிக்க வந்தருளும்
பக்தியில் இறைபக்தியின் மக்களை வளரச் செய்யவந்தருளும்
பற்றில்லாதவர்கள் இளைப்பற்றுள்ளவர்களாய்
வாழ வந்தருளும்
பலகோடி மக்களையும் பரகதியில் சேர்க்க வந்தருளும்

மனித இனம் மாண்புடன் வாழச் செய்ய வந்தருளும்
மக்கள் எல்லோரும் மனித நேயத்துடன் வாழ வந்தருளும்
மத வேறுபாடின்றி சமத்துவம் மலரச் செய்ய வந்தருளும்
மனிதன் மனிதனை மதித்து வாழ வரமருள வந்தருளும்

கல்நெஞ்சம் படைத்தோர் கனிவுள்ள உள்ளம்
கொண்டவராய் வாழ வந்தருளும்
கனிந்த உள்ளங்கள் மலரச் செய்ய கனிவுடன்
வாழ வந்தருளும்
கருணையுள்ளம் கொண்டவர்கள் பெருகிட வந்தருளும்
கண்ணியமும், கட்டுப்பாடும், கற்பும் சிறந்தோங்க
வந்தருளும்

விண்ணையும் மண்ணையும் இணைத்திட வந்தருளும்
விரக்தியில் வாழ்வோர் வீரமுடன் வாழ்ந்திட வந்தருளும்
விதிகள் நல்விதிகள் கடைப்பிடித்து வாழப்பட வந்தருளும்
வித்தியாசங்கள் வேறுபாடுகள் அகற்றிட விரைந்து
வந்தருளும்

பிரிவுகள் சாதி, சமய, மொழிப்பிரச்சினைகள்
அகற்றப்பட வந்தருளும்


பிளவுகள் இடறல்கள் இடம்பெறாது இணைந்து
வாழ வந்தருளும்
பித்தலாட்டங்கள், பேயாட்டங்கள் மறைந்திட வந்தருளும்
பிசகுகள், குடும்பப் பிசகுகள் தீர்ந்திட திருவருள்
புரிய வந்தருளும்

புதிய வானம் புதிய பூமி மலர்ந்திட வந்தருளும்
புது வாழ்வு தோன்றி பழையன களைந்திட வந்தருளும்
புதிய கண்ணோட்டம் புதிதாய் தோன்றிட வந்தருளும்
புவி வாழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வந்தருளும்

இன்னல்கள் இடைஞ்சல்கள் நீக்கிட இறைவா வந்தருளும்
இகத்தினில் உன் பிரசன்னம் உதித்திட
இறைவா வந்தருளும்
இனியவை தோன்றிட இடர்கள் மறைந்திட
இறைவா வந்தருளும்
இன்றும் என்றும் எப்போதும் உம் பிரசன்னம் இருக்க
இறைவா வந்தருளும்

எளியவர்கள் வாழ்வில் ஒளிவிடும் உயிர் சுடராய் வந்தருளும்
எண்ணற்ற மக்கள் வாழ்வில் இருளகற்றி ஒளியேற்ற
வந்தருளும்
எப்போதும் உம் மக்கள் உம் அண்டை விருப்பமுடன்
வாழ வந்தருளும்
எல்லா இனத்தவர்களும் சாந்தி, சமாதானம்,
சமத்துவத்துடன் வாழ வந்தருளும்

தந்தையும், தாயுமாய் தனயனைக் கண்ணோக்க
வந்தருளும்
தரணியில் வாழ்வோருக்கு உம் கிருபை
கிடைத்திட வந்தருளும்



அருட்சகோ. டெலாறோஸ். அ.கா

தன்னிகரில்லா வாழ்வு வாழ்வில் தழைத்தோங்க வந்தருளும்
தயவு, தாட்சணியம் சகலர்க்கும் சமனாய் கிடைத்திட
வந்தருளும்

வாழ்வும் வழியுமாய், ஒளியும், உண்மையுமாய் வந்தருளும்
வாழ்வின் நிறைவாய் வரமருள் தந்து காக்க வந்தருளும்
வானமும் வையமும் வாழ்திட வந்தருளும்
வாழ்வின் வளர்பிறையாய் வசந்தம் வீசிட வந்தருளும்

# மறைக் கல்வி அறிவோம்

## ஆண்டவர் இயேசு கிறிஸ்து



**01. ஆண்டவர் இயேசு கிறிஸ்து யார்?**

- நம்மை மீட்பதற்காக மனுவுரு எடுத்த இறைவனின் திருமகனே இயேசு கிறிஸ்து ஆவார்.

**02. ஆண்டவர் இயேசுவைப் பற்றிய கத்தோலிக்கத் திருச்சபையின் போதனை என்ன?**

- ஆண்டவர் இயேசு இறைவனின் திருமகன் என்பதும்,அவர் மனுவுருக் கொண்டார் என்பதுமே முக்கிய படிப்பினையாகும்.

**03. அப்படியானால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மெய்யாகவே கடவுளாயிருக்கிறாரா?**

- ஆம்,தந்தையாகிய கடவுளுடன் அதே இயல்பை அவர் கொண்டிருப்பதால் இயேசு கிறிஸ்து மெய்யாகவே கடவுளாயிருக்கிறார்.

**04. அதுபோல அவர் மெய்யாகவே மனிதராயிருக்கிறாரா?**

- ஆம்,அவருக்கு எம்மைப் போலவே உடலும், ஆன்மாவும், உள்ளமும் இருக்கின்றப்படியால் அவர் மனிதராக இருக்கிறார்.

**05. இதன்படி இயேசுவுக்கு எத்தனை இயல்புகள் இருக்கின்றன?**

- இரு இயல்புகள், உள்ளன. அவை
  1. இறை இயல்பு 2. மனித இயல்பு.

**06. இரு இயல்புகள் இருப்பதால் ஆண்டவர் இயேசுவினுள் இரு ஆள் தன்மை இருந்ததா?**

- இல்லை, ஆண்டவர் ஒரே ஆள் தான். அவர் பரிசுத்த திருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய திருமகனானவர்.

**07.இறைமகன் மனுவுரு கொண்டது எப்படி?**

- இறைவன் மனுவுரு கொண்டது, அவர் தூய ஆவியானவரினால் நிழலிட்டு அன்னை மரியிடம் கருவுற்று பிறந்தமையினாலாகும்.

**08. இவ்வாறு மனுவுரு கொண்டதனால் இறைமகன் தம், கடவுள் தன்மையை இழந்துவிட்டாரா?**

- இல்லை, அவர் மெய்யாகவே கடவுளாகவும், மெய்யாகவே மனிதனாகவும் இருக்கிறார்.

**09 ஆண்டவர் இயேசு எல்லாக் காலங்களிலும் இருக்கின்றாரா?**

- கடவுளாக அவர் எப்பொழுதும் இருக்கிறார். ஆனால் மனிதனாக இருப்பது அவர் மனுவுரு கொண்ட வேளையிலிருந்து தான்.

**10 இயேசுவின் தாய் யார்?**

- இயேசுவின் தாய் மரியாள்

**11 இயேசுவின் தந்தை யார்?**

- இயேசுவின் தந்தையாயிருப்பவர் தந்தையாகிய இறைவனே




## விவிலியப் பகுதி



**நற்செய்தி : புனித மாற்கு**
**அதிகாரங்கள் – 08–09**

138. இயேசுவை யார் யார் என்று மக்கள் கூறினர்?
139. இயேசு தம் சீடர்களிடம் நான் யார் என்று கேட்க "நீர் மெசியா" என்று கூறியவர் யார்?
140. இயேசு எதைப்பற்றி தம் சீடருக்கு போதித்தார்?
141. "என் கண்முன் நில்லாதே சாத்தானே" என்று இயேசு யாரைப்பார்த்துச் சொன்னார்?
142. தன்னைப் பின்பற்றும் எவரும் எதை துறந்து பின்பற்ற வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?
143. எதன் பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும்அதை காத்து கொள்வார்?
144. உலகம் முழுவதையும் தமதாக்கி கொண்டாலும் எதை இழந்தால் பயன் இல்லை?
145. இங்கே இருப்பவருள் சிலர் எதை காண்பதற்கு முன் சாகமாட்டார்கள் என்று இயேசு சொன்னார்?
146. எத்தனை நாட்களுக்கு பின்பு இயேசு மலைக்கு சென்றார்?
147. யாரை கூட்டிக்கொண்டு மலைக்கு சென்றார்?

15

**மார்கழி 10ம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு உங்களது பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.**



ஏற்றியன் ஐவன் இன்பராஜ்
தரம் 4, புனித பேதுரு கல்லூரி



ஏற்றியன் சுரேஸ்குமார்.
தரம் 4, புனித பேதுரு கல்லூரி



P. பிரியானா
தரம் 3, கொழும்பு நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம்

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் :**
**cgnanaoli@yahoo.com**

## புனித பிரான்சிஸ் சவேரியார் டிசம்பர் 03



இந்தியாவின் அப்போஸ்தலர் என்று இவர் அழைக்கப்படுகின்றார். இவர் ஸ்பெயின் நாட்டில் நவார் மாகாணத்தில் சேவியர் அரண்மனையில் 1506 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர். 18ம் வயதில் கல்வி கற்க பாரிஸ் நகருக்குச் சென்றார். அங்கு புனித இஞ்ஞாசியாருடன் பழகி மனம் மாறி அவருடைய சீடரானார். 1531ல் போர்த்துக்கல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு கோவாவுக்குச் சென்று அவர் தமது செபத்தாலும் தவத்தாலும் அந்நகரைச் சீர்படுத்தி அவிசுவாசிகளை மனம் திருப்பினார். தெருக்கள் வழியாக ஒரு சிறு மணியை அடித்துக்கொண்டு போவார். சிறுவர்களை தம்மிடம் அழைப்பார். அவர்கள் வந்து அவரைச் சூழ்ந்துக்கொள்வார்கள். தமது வேதத்தைப் பற்றி அவர்களுக்கு கற்பிப்பார். சிறுவர்கள் வீட்டுக்குப் போய் பெற்றோரை அழைத்து வருவார்கள். பெற்றோர்கள் வந்து மனம்மாறி கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இவர் தென் இந்தியா, இலங்கை, மலாக்காய், ஜப்பான் முதலிய நாடுகளில் வேதம் போதித்தார். 2.12.1552ஆம் ஆண்டு சீனாவுக்குப் புறப்பட்டுப் போகும் பொழுது சான்சியன் தீவில் உயிர் துறந்தார்.

நமது ஆயர்களுக்காகவும் குருக்களுக்காகவும் புனித சவேரியாரிடம் மன்றாடுவோம்.

**சேன் பர்னாந்து**

# வர்ணம் தீட்டுக.










# உன்னோடு ஒரு நிமிடம்

## நொறுங்கிப் போகாதே நண்பா!

# எதையும் இழக்க தயாராய் இரு இயேசுவுக்காக...

என்னுடன் அன்புறவு கொள்ளுதல் என்பது உறவுக்குத் தடையாக இருக்கும் பொருட்கள், உறவுகள், சுயம் எல்லாவற்றையும் விட்டுவிடுதலாகும்.

உனது நெருங்கிய நபர்களின் உறவுகளையும் ஏன் உன் தாய் தந்தையர் உறவுகளையும் உனது சுயத்தையும் நீ விட்டு விடுவதாகும்.

நீ பொருட்கள், உறவு, சுயம் போன்ற சில பவள முத்துக்களை வைத்திருக்கலாம்.

பவளம் என்பது தன்னிலே நல்லதுதான் ஆனால் உன் வாழ்வில் பவளம் போன்று உள்ள உறவுகள், செல்வங்கள், இடங்கள், பதவிகள், பட்டங்கள் போன்றவற்றின் மீதுள்ள பற்று என் மீதுள்ள அன்புக்குத் தடையாக இருக்கலாம்.

இத்தகைய பவளங்கள் உனது ஆன்மீக வாழ்வுக்கு ஆபத்தை விளைவிக்கலாம். இவ்வகைப் பவளங்களை என்னைப் பின் செல்வதற்காக நீ விட்டுவிட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் நீ நிலையானவையும் உண்மையானவற்றையும் விட்டுவிட்டு போலிகளின் பின்னால் செல்லாதே.

உன்னுடைய சில உறவுகள் உனது ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக தடையாக இருந்து உன் வளர்ச்சியைத் தடுக்கின்றன என்றால் அவற்றை நீ விட்டுவிடு.

உண்மையான விலையுயர்ந்த பவளத்தை அடைவதற்காக மதிப்பற்ற பவளத்தை நீ விட்டுவிட வேண்டும்.

நீ பொருட்கள், உறவுகள், சுயம் இவற்றின் மீது பற்றுக் கொண்டிருந்தால் நீ இவற்றுக்கு அடிமையாகி விட்டாய் என்பது பொருள் உன் வாழ்வில் நீ சில விக்கிரகங்களை வைத்திருக்கின்றாய் இத்தகைய சிலைவழிபாடு என்னோடு உனக்கு உள்ள உறவை சிதைக்கின்றது.

இப்போது புரிந்து கொள்! இதனால்தான் என் மகன் இயேசு ஒரு கடினமான செய்தியைச் சொன்னார்.

“என்னைவிட தன் ரத்த உறவுகளை அதிகமாக நேசிக்கும் எவரும் எனக்கு ஏற்புடையவரல்ல” எனக்குப் பிரியமானவனே! என்னையே சிக்கெனப் பற்றிக்கொள்

விழுது இறங்கி கிளையின் பாரம் தாங்கும் ஆல மரமென நீ உறுதியாக இருப்பாய். உனக்கும் எனக்குமான இடைவெளி எதற்கு? பதவி, அதிகாரம், பாசம், ஆசை என்ற ஏதாவது ஒரு பற்று இடையில் புற்று வைக்கக்கூடும். என்னைப் பற்றிக் கொள்ள எல்லாவ-ற்றையும் விட்டு விட்டு உன்னை முழுவதும் என்னால் நிரப்பிக் கொள்!

அதுவே புனிதம், அதுவே ஆனந்தம்!

**தொடரும்**

# தெளிவாகச் சிந்திப்பது எப்படி?



**அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.**

வாளைவிட பேனாவே அதிக சக்தி வாய்ந்தது என்பது ஓர் அமுதவாக்கு. உடற்பலத்தை நம்பியிருப்பவர்களை விட நல்ல சிந்தனையாளர்களே அதிகம் சாதிப்பவர்கள். வாழ்வின் செயற்பாடுகளில் சக்தியை விட புத்தியே அதிகம் சாதிக்கும். சிந்தனை செய்வது கடினமானது. இதனால் சிறந்த சிந்தனையாளர் அரிதாகவே காணப்படுகின்றனர். மிகச் சிலரே தெளிவாகச் சிந்திப்பதற்குத் தம்மைப் பழக்கிக் கொள்ளுகின்றனர். தெளிவான சிந்தனைக்கு ஆரம்பம் எதைப்பற்றியாவது சிந்திக்கத் தொடங்குவது, எமக்கு சிந்திப்பதற்கான நல்ல அறிவும் அனுபவமும் அவசியம். அதேபோன்று இந்தச் சிந்தனையின் விளைவாக எதை அடையப்போகின்றோம் என்று தெரிந்திருப்பதும் முக்கியம்.

## மனம் என்னும் ஆலை

நல்ல சிந்தனைக்கு நல்ல தகவல்கள் அவசியம். தகவல்கள் மனம் என்னும் ஆலை ஊடாகச் செல்லும்போது ஏற்படுவது நல்ல எண்ணங்கள். தைக்கும் ஒருவர் சேலை சுருளிலிருந்து உடை தைப்பதற்குத் தேவையான துணியை வெட்டுகிறார். கத்தரிக்கோலுடனான தையற்காரரின் ஆற்றல் எமது சிந்திக்கும் படிமுறையை ஒத்தது. தையற்காரன் துணியை வெட்டுவதற்கு முன்னர் தைக்கப்போகும் உடையின் அளவைத் தெரிந்திருக்க வேண்டும். அதேபோன்று, சிந்தனையாளன் எண்ணங்களை ஒழுங்குபடுத்துவதற்குமுன் அடையப்போகும் நோக்கம் பற்றிய தெளிவை வைத்திருக்க வேண்டும்.

தெளிவான சிந்தனைக்கு தெளிவான குறிக்கோள் அவசியம். அடையப்போகும் இலக்கு என்னவென்று தெரிந்தால் அதற்காக உமது அறிவு, அனுபவம் என்பவற்றிலிருந்து தகவல்களைத் தேர்ந்தெடுக்க முடியும். இது எப்படிப்பட்ட தகவல்கள், அனுபவங்கள் உமக்குத் தேவை என்பது பற்றி வழிகாட்டும்.

உமது அனுபவத்தை ஆழமாக்கவும் அகலமாக்கவும் பல வழிகள் உண்டு. சரியாகத் தேர்ந்தெடுத்த வாசிப்பின் மூலம் பலவற்றைக் கற்றுக்கொள்ளலாம். தீர்க்கமுடியாத சிக்கல்களைத் தீர்க்கலாம். வெவ்வேறு கழகங்களில் சேர்வதன் ஊடாகவும் புதிய பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதனூடாகவும், பலரைச் சந்திக்கலாம். பயணங்கள், ஆய்வுப்பயணங்கள் மூலமாக புதிய புதிய இடங்களைத் தெரிந்துகொள்ளலாம். எதிலும் உணர்வுபூர்வமாக ஈடுபட முயற்சிக்க வேண்டும். வெறும் பார்வையாளராக இருப்பதை தவிர்த்துக் கொள்ளவும். உண்மையான ஆர்வம் உமது மனத்தை ஆழமான, சுறுசுறுப்பான, தெளிவான சிந்தனைக்குத் தூண்டும்.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலில் அப்பிரச்சினை என்னவென்று தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாக உமது துவிச்சக்கரவண்டியில் சில்லுக்கு காற்றுப்போய்விட்டது என்று வைத்துக்கொள்வோம். துவிச்சக்கரவண்டி பற்றி உமது அறிவும் அனுபவமும் காற்றுப்போனதற்கு 3 காரணங்கள் இருக்கலாம் என்று தெரியப்படுத்தம். மீண்டும் காற்றடிக்க வேண்டி இருக்கலாம். அல்லது “வால்வு” பழுதடைந்திருக்கலாம். அல்லது ஓட்டை ஏற்பட்டிருக்கலாம், எனவே முதலில் மீண்டும் காற்றடித்துப் பார்க்க வேண்டும். அதன் பின்னர் “வால்வை” சரிசெய்ய வேண்டும். இறுதியாக ஒட்டுப்போடுவதற்கு முயற்சிக்க வேண்டும். எனவே உமது உண்மையான பிரச்சினை காற்றுப்போனதன் காரணத்தைக் கண்டுபிடிப்பதாகும். நீர் செய்ய வேண்டியது இந்த 3 காரணங்களில் சரியானதைக் கண்டுபிடிப்பதாகும்.

மேற்குறிப்பிட்டது ஒரு சுலபமான உதாரணம். சில வேளைகளில் மிகச் சிக்கலாக பிரச்சினை ஏற்படலாம். அவ்வேளைகளில் அவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வது அவசியம். பல வேளைகளில் நாம் அறிகுறிகளைப் புறந்தள்ளி உண்மையான காரணங்களை நிவர்த்தி செய்யத் தவறிவிடுகின்றோம்.

## சிந்தனையைத் தூண்டும் பதில்கள்.

இன்னுமொரு தவறு என்னவென்றால், மனதில் எழும் முதல் தீர்வை இறுதித் தீர்வாகவே ஏற்றுக்கொள்வது. சாதாரணமாக, முதலில் வரும் தீர்வு பாதி வழிக்கே கொண்டு செல்லும். அதற்கு மேலாக உமது சிந்தனைக்குத் தேவையான, அடிப்படையான தொலைவிலுள்ள தீர்வு ஒன்று இருக்கும். இதுதான் சிந்தனையாளன் தேடும் சிந்தனையைத் தூண்டும் பதில்.

மோட்டார் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டபோது அது குதிரை இல்லா வண்டி என்று கருதப்பட்டது. அவ்வாறே அழைக்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல அதன் வடிவமைப்பாளர் மோட்டார் வாகனத்திற்கு தனி இயல்பு உண்டு என்பதை உணர்ந்து அதற்கேற்ற வடிவத்தை அமைத்து தற்போது நாம் காணும் வடிவமைப்பைக் கொடுத்துள்ளார். குதிரை வண்டியின் வடிவத்தை அமைப்பது முதல் தீர்வாக இருந்தது. தற்போதைய வடிவத்திற்கு வருவதற்கு தெளிவான சிந்தனை தேவைப்பட்டது.

தீர்வைத் தேடும்பொழுது கடந்தகால வழிகளின் தவறுகள் நீக்கப்பட்ட தீர்வைத் தேடுங்கள். உண்மையான, தனிச்சிறப்புடைய சிற்பியின் வேலை எதிர்காலத்தைச் சுட்டி நிற்பதாக வெளிப்படும். அவை கடந்தகாலத்தில் நடந்தவற்றிற்கு வெறும் புது மெருகூட்டுவதாக மட்டும் அமைப்பதில்லை.




# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 32வது வெளிநாட்டு திருப்பயணம்!

## தாய்லாந்து, யப்பான் பயணத்தின் சில நிகழ்வுகள்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது 32வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம் மற்றும், கிழக்கு ஆசியாவுக்கான அவரின் நான்காவது திருத்தூதுப் பயணமாக, நவம்பர் 19, இச்செவ்வாய் மாலை 7 மணிக்கு, தாய்லாந்து மற்றும் ஜப்பான் நாடுகளுக்குப் புறப்பட்டார். ஏழு நாள்கள் கொண்ட இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

### பாங்காக் விமான நிலைய வரவேற்பு

தாய்லாந்து நாட்டுத் தலைநகர் பாங்காக் பன்னாட்டு விமான நிலையத்தை, நவம்பர் 20, இப்புதன் பகல் 12.30 மணிக்குச் சென்று சேர்ந்தார் திருத்தந்தை பிரான்சிஸ். அப்போது இலங்கை நேரம், புதன் முற்பகல் 11 மணியாக இருந்தது. அவ்விமான நிலையத்தில், தாய்லாந்து அரச அவையின் பிரதிநிதிகள், தாய்லாந்து அரசின் ஆறு அதிகாரிகள், மற்றும், அந்நாட்டு ஆயர் பேரவையின் உறுப்பினர்கள் திருத்தந்தையை வரவேற்றனர். தாய்லாந்தில் வாழ்கின்ற ஏறத்தாழ மூன்று இலட்சம் கத்தோலிக்கரைக் குறிக்கும் விதமாக, 11 சிறார், மரபு உடைகளில் திருத்தந்தையை மலர் கொத்துக் கொடுத்து வரவேற்றனர் விமானநிலையத்தில், இராணுவ அணிவகுப்பு மரியாதையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதற்குப் பின்னர், அங்கிருந்து 34.5கிலோ மீட்டர் தூரத்திலுள்ள, பாங்காக் திருப்பீடத் தூதரகத்திற்குக் காரில் சென்றார். 1984ம் ஆண்டு புனித திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் தாய்லாந்து நாட்டில் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட 35 ஆண்டுகளுக்குப் பின், திருத்தந்தை ஒருவர் தாய்லாந்தில் மேற்கொள்ளும் திருத்தூ-துப் பயணமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இப்பயணம் அமைந்துள்ளது. தாய்லாந்தில், ஏறத்தாழ 95 விழுக்காட்டினர் புத்தமதத்தினராக இருந்தாலும், ஏனைய மதத்தவரும் இங்கு மதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. புத்த புத்தமதத்தினரும், திருத்தந்தையின் இப்பயணத்தை ஆவலோடு எதிர்நோக்கியுள்ளனர் என்று தலத்திருஅவை அதிகாரிகள் கூறியுள்ளனர். தாய்லாந்தில் (சியாமில்) 1669ம் ஆண்டு, சியாம் அப்போஸ்தலிக்க ஆட்சிப்பீடம் நிறுவப்பட்டதன் 350ம் ஆண்டு நிறைவையொட்டி, திருத்தந்தையின் இப்பயணம் நடைபெற்றது.

## இறைவனின் அன்பு அனைவருக்கும் உரியது



தாய்லாந்து பயணம் குறித்து, கர்தினால் Kovithavanij

தாய்லாந்து நாட்டில், கத்தோலிக்கர்கள் சிறுபான்மையினர்தான் என்றாலும், திருத்தந்தையின் வருகையால், கத்தோலிக்கர்களின் தாக்கம் இன்னும் அதிகரிக்கும் என்று கூறினார்.

இறைவனின் அன்பு அனைவருக்கும் உரியது என்பதை தாய்லாந்து மக்கள் உணரும் வண்ணம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூதுப் பயணம் அந்நாட்டில் அமையும் என்று, தாய்லாந்து ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால், Francis Xavier Kriengsak Kovithavanij அவர்கள் கூறியுள்ளார்.

நவம்பர் 19ம் திகதி மாலை, தாய்லாந்து நாட்டிற்கு திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட வேளையில், அதே விமானத்தில் பயணம் செய்த பாங்காக் பேராயர், கர்தினால் Kovithavanij அவர்கள், Zenit கத்தோலிக்கச் செய்திக்கு அளித்த பேட்டியில், திருத்தந்தையின் பயணம், தங்கள் நாட்டில் வாழும் வறியோருக்கு பெரும் ஆறுதலாகவும், உந்து சக்தியாகவும் அமையும் என்று கூறினார்.

தாய்லாந்து நாட்டில், கத்தோலிக்கத் திருஅவை நிறுவப்பட்டதன் 350ம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் இவ்வேளையில், தாய்லாந்து நாட்டில், சிறுபான்மையினராக வாழும் கத்தோலிக்கர்களுக்கு, திருத்தந்தையின் வருகை, பெரும் தூண்டுதலாக விளங்கும் என்று, கர்தினால் தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

6 கோடியே 70 இலட்சம் மக்கள் வாழும் தாய்லாந்து நாட்டில், கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை, ஏறத்தாழ 3,50,000தான் என்றாலும், திருத்தந்தையின் வருகையால், தங்கள் நாட்டில், கத்தோலிக்கர்களின் தாக்கம் இன்னும் அதிகரிக்கும் என்று தான் நம்புவதாக, கர்தினால் அவர்கள், தன் பேட்டியில் எடுத்துரைத்தார்.

## டோக்கியோ திருப்பலியில் திருத்தந்தை வழங்கிய மறையுரை



**நன்றி உணர்வோடும், பரிவோடும், அனைத்து உயிர்களையும் காப்பதே, கிறிஸ்தவ சமுதாயத்திற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு**

ஒருவருக்கொருவர் உதவி செய்வது, ஆதரவாக வாழ்வது எவ்விதம் என்பதைச் சொல்லித்தர வேண்டிய இல்லங்கள், பள்ளிகள் மற்றும் சமுதாயத்தில், போட்டிகள், இலாபம், திறமை என்ற கருத்துக்களே அதிகமாகச் சொல்லித்தரப்படுகின்றன.

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, இப்போது நாம் கேட்ட நற்செய்தி வாசகம், இயேசு மலை மீது வழங்கிய மறையுரை என்று அழைக்கப்படுகிறது. நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய பாதையை இந்த மறையுரை விவரிக்கிறது. விவிலியத்தில், மலை என்பது, இறைவன் தன்னையே வெளிப்படுத்தும் ஓர் இடமாக உள்ளது. மலையின் சிகரம் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தைக் குறித்தும் புதிய கண்ணோட்டங்களை வழங்குகிறது. இயேசுவில் நாம் மனிதர்கள் அடையக்கூடிய சிகரத்தை நாம் சந்திக்கிறோம். அவரில் நாம் புது வாழ்வையும், இறைவனின் குழந்தைகளுக்கே உரிய சுதந்திரத்தையும் அறிந்துகொள்கிறோம்.

### இவ்வுலகம் வகுக்கும் அளவுகோல்கள்

நாம் வாழ்வுப் பாதையில் சந்திக்கும் பல்வேறு கவலைகளால், இறைவனின் குழந்தைகளாய் வாழும் சுதந்திரத்தை இழக்கக்கூடும். நமது கவனமும், சக்தியும், பொருள்களை உருவாக்குதல், போட்டிகள், மற்றும், நுகர்வு கலாச்சாரத்தில் திசை திருப்பப்படுகின்றன. முக்கியம் எவை என்பதைக் காட்ட இவ்வுலகம் வகுக்கும் அளவுகோல்களால், வாழ்வின் உண்மையான முக்கியத்துவத்தை நாம் மறந்துவிட வாய்ப்புண்டு. அனைத்தையும் உருவாக்கி, சொந்தமாக்கிக்கொள்ள நமக்கு எழும் ஆவல், நம் ஆன்மாவைச் சிறைப்படுத்துகின்றது!

### தனித்துவிடப்படும் மக்கள்

பொருளாதாரத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள ஜப்பானில், தனித்துவிடப்படும் மக்கள் பலர் உள்ளனர் என்று இளையோர் என்னிடம் கூறினர். ஒருவருக்கொருவர் உதவி செய்து, ஆதரவாக வாழ்வது எவ்விதம் என்பதைச் சொல்லித்தரவேண்டிய இல்லங்கள், பள்ளிகள் மற்றும் சமுதாயத்தில், போட்டிகள், இலாபம், திறமை என்ற கருத்துக்களே அதிகமாகச் சொல்லித்தரப்படுகின்றன.

### கவலைகள் என்ற சுமை

கவலைகள் என்ற சுமையைத் தாங்குவதற்குப் பதில், நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பதை, ஆண்டவரின் வார்த்தைகள் நமக்கு நினைவுறுத்துகின்றன. ‘எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள்... நாளைக்காகக் கவலைப்படாதீர்கள்.” (மத். 6:25,31,34) என்று மூன்று முறை கூறியுள்ளார். இந்த வார்த்தைகளின் வழியே, நம்மைச் சுற்றி நடப்பனவற்றைப் பற்றி கவலைப்படாமல் இருக்கவோ, அவற்றை குறித்து பொறுப்பேற்காமல் இருக்கவோ இறைவன் நம்மைத் தூண்டவில்லை. அதற்கு மாறாக, நம் வாழ்வில் எவை முக்கியம் என்பதை நிர்ணயிக்க விடப்படும் அழைப்பு இது: ‘அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.” (மத். 6:33)

நமது அடிப்படை தேவைகளான உணவு, உடை ஆகியவற்றைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று ஆண்டவர் சொல்லவில்லை, மாறாக, நாம் ஒவ்வொரு நாளும் எடுக்கும் முடிவுகளை மறு ஆய்வு செய்வதற்கு அழைக்கிறார். எப்படியாவது, வெற்றி பெறவேண்டும், அனைத்தையும் தனதாக்கிக்கொள்ள வேண்டும் என்று இவ்வுலகம் சொல்லித்தரும் பாடங்களுக்கு அடிமையாகாமல் இருக்க ஆண்டவர் அழைக்கிறார்.

### இவ்வுலகம், இறைவன் வழங்கியுள்ள கொடை

நம்மை நாம் அடைத்துக்கொள்ளும் “நான்” என்ற சிறைக்கு எதிராக இருப்பது, பகிர்வுக்கும் கொண்டாட்டத்திற்கும் நம்மை அழைக்கும் “நாம்” என்ற சொல். இன்றைய முதல் வாசகத்தில், உயிர் துடிப்புடனும் அழகுடனும் திகழும் இவ்வுலகம், இறைவன் நமக்கு வழங்கியுள்ள உன்னதக் கொடை என்று சொல்லப்பட்டுள்ளது: ‘கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன” (தொ.நூல் 1:31) இந்தக் கொடையின் முதலாளிகள் நாம் அல்ல, மாறாக, இதை மற்றவருடன், நீதியோடு பகிர்ந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் (“இறைவா உமக்கே புகழ்“, 70).

நன்றி உணர்வோடும், பரிவோடும், அனைத்து உயிர்களையும் காப்பதே, கிறிஸ்தவ சமுதாயத்திற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு. உலகில் மிகச் சிறந்தது, தூயது ஆகியவற்றை அன்பு செய்வதைவிட, குறையுள்ளது, மற்றவர்களால் அன்பு செய்யப்பட இயலாதது ஆகியவற்றை அன்பு செய்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு தன் வாழ்வில், தொழுநோயாளரை, பார்வையற்றவரை, பரிசேயரை, பாவியை அரவணைத்தார். சிலுவையில் தன்னை அறைந்தவர்களையும், தன்னோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளியையும் அவர் அரவணைத்தார்.

போர்க்களத்தில் பணியாற்றும் ஒரு மருத்துவமனையைப் போல, திருஅவை செயலாற்றுவதே, நற்செய்தியை உண்மையாகப் பறைசாற்றும் வழி. இறைவனோடு ஒன்றித்து, நல்மனம் கொண்டோருடன் இணைந்து, அனைத்து உயிர்களையும் பாதுகாக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்க, நாம் புளிப்பு மாவாக மாறவேண்டும்.




475வது ஆண்டு நிறைவில்...

# மன்னார் மறைசாட்சிகள்

05

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### அத்தியாயம் இரண்டு

மன்னார் வேதசாட்சிகள்.

மன்னார் மாதோட்ட வரலாறு
1.2.2 கடையர் வரலாறு

### 1.3 .போத்துக்கேயர் கால மன்னார் கத்தோலிக்க வரலாறு

கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான தோமையார் மன்னார்த் தீவில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பினார் என்றும் மன்னார்த் தீவிலே சந்தோம் பட்டணம் இருந்ததாகவும் தற்போது எருக்கலம்பிட்டி என அழைக்கப்படுவதாகவும் வரலாறு உண்டு. சாந்தோம் கிறிஸ்தவர்கள் மன்னார்த் தீவில் வாழ்ந்ததற்கான வரலாறு உண்டு என அன்ரனைனஸ் அமதி அடிகளார் தனது **மன்னார் வேதசாட்சிகள்** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். 6ஆம் நூற்றாண்டில் சீரியா நாட்டைச் சேர்ந்த நெஸ்தோரியக் கிறிஸ்தவர்கள் அநுராதபுரத்தில் வாழ்ந்ததற்கான **அடையாளமாக சிலுவை** ஒன்று அகழ்வாராச்சியின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மாந்தையில் சீரிய மரபு மீறாத திருமுழுக்குத் தொட்டியும் அகழ்வாராட்சியின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் கத்தோலிக்க வரலாறு மன்னார் கிறிஸ்வர்களின் மனமாற்றத்துடன் ஆரம்பமாகின்றது. பிரான்சீஸ்கன் சபையினரே முதல் முதலாக இலங்கையில் நற்செய்தி பரப்பினர். 1544 ஆம் ஆண்டு இந்தியாவில் மறைபரப்புப் பணியில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த புனித பிரான்சீஸ் சவேரியாரை தமக்கு வந்து ஞானஸ்நானம் தரும்படி மன்னார் மக்கள் அழைத்தனர். புனித சவேரியார் தமது நாமங்கொண்ட ஒரு திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். அவர் வெகு விரைவாக ஞானஸ்நானம் கொடுத்தார். அதைக் கேள்விப்பட்ட திருக்கேதீஸ்வரக் குருக்கள் ஆத்திரமடைந்து சங்கிலி மன்னனுக்கு தகவல் அனுப்பினர். அவன் வந்து 600-700 பேருக்கு மேல் கொலை செய்தான். சில கிறிஸ்தவர்கள் மாதோட்டத்திற்குத் தப்பியோடினர். (பெறோறா : அன்றிக்கஸ கடிதங்கள் 1562)

போத்துக்கேயர் கால மறைபரப்பாளர்கள் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் போதித்துப் பலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர். அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார்தான் மன்னார்த்தீவின் முதல் பங்குத் தந்தையாகும். சங்கிலியனின் கலாபனையினால் தப்பியோடிய 200 இந்து கரையார் மாதோட்டத்திலிருந்து தமது உறவினர்களுடன் பட்டித்தோட்டத்தில் தமது காலத்தில் வந்து குடியேறினர் என குறிப்பிட்டுள்ளார். (பெறோறா : அன்றிக்கஸ் கடிதம் 1562) அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களுக்கென பட்டித்தோட்டத்தில் ஒரு கோவில் கட்டினார். (Kuruppu: messenger : 1946 ) அவர் பட்டங்கட்டிகளின் உதவியுடன் பல சேவைகளைச் செய்தார். கோவா நகர ஆயரின் உதவியுடன் இயேசு சபைக் குருக்கள் மன்னார்த்தீவில் ஒரு பல்கலைக் கழகம் உருவாக்க எண்ணியிருந்தனார். ஆனால் அது கைகூடவில்லை. இத்திட்டத்தைப் புன்னைக்காயலில் நிறைவேற்றினர்.

இயேசு சபையினர் மன்னார்த்தீவில் எருக்கலம்பிட்டி பகுதியிலும் பிரான்சீஸ்கன் சபையினர் மன்னார்த்தீவில் சவுத்பார், பெரியகடை, பள்ளிமுனை, மற்றும் சின்னக்கடைப் பகுதிகளிலும் (சாந்தகுருஸ் பங்கு) மாதோட்டம் முழுவதிலும் பணியாற்றினர். 1565 இல் பட்டித்தோட்டத்தில் கொள்ளைநோய் ஏற்பட்டது. 1570ல் மன்னார்த்தீவு முழுவதும் கொள்ளைநோய் ஏற்பட்டது. அதனால் பலர் மடிந்து போயினர். பல சைவ சமயத்தவர்கள் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். இதுவே போத்துக்கேயர்கால மன்னார் திருச்சபையின் சுருக்க வரலாறாகும்.

மன்னார்த்தீவிலே சைவ தமிழ் மக்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி அந்த சத்திய வேதத்திற்காக தம்மையே அர்ப்பணித்த உண்மை வரலாறு இன்றும் எல்லோராலும் பேசப்பட்டு வருகின்றது. உள்நாட்டு மேலைத்தேச வரலாற்று அறிஞர்கள் இச்சரித்திர நிகழ்வைத் தமது வரலாற்று ஆய்வு நூல்களில் பொறித்து வைத்துள்ளனர். இது மறைக்கவோ மறுக்கவோ முடியாத சரித்திர நிகழ்வாகும்.

### 2.1 போத்துக்கேயர் வந்த போது இலங்கையின் அரசியல் நிலை

1505 ஆம் ஆண்டு சித்திரை மாதம் டொன் லோறன்சோ டி அல்மேடாவின் தலைமையில் வந்த கப்பல் புயலினால் அலைக்களிக்கப்பட்டு இலங்கையை வந்தடைந்தது. அதே ஆண்டில் வியாபாரம் செய்ய அவர்களுக்கு அனுமதி கிடைத்தது. இக்காலத்தில் மூன்று சகோதரர்களான புவுனேகபாகு, றயிகமபண்டார, மாயாதுண்ணை ஆகியோர் தமது மாமனைக் கொலை செய்து கோட்டை அரசைத் தமக்குள் பங்கிட்டுக்கொண்டனர். அப்போது திருகோணமலையும் மட்டக்களப்பும் ஒரு தமிழரசனால் ஆட்சி செய்யப்பட்டது. யாழ்ப்பாண இராட்சியம் சங்கிலி என்று அறியப்பட்ட 7ஆம் செகராசசேகரன் என்னும் தமிழரசரால் ஆளப்பட்டு வந்தது. இந்த யாழ்ப்பாண இராச்சியமானது மன்னார்த்தீவு, மாதோட்டத்தின் நெடுந்தீவு, ஏனைய அயல் தீவுகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. (Schurharmer: 1977: 372 ) யாழ்ப்பாண இராச்சியத்தின் சிங்கை அரச பரம்பரையினரும், முதலிமார்களும், பட்டங்கட்டிகளும் கரையாருமே அரசியலில் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். (Bastiampillai : Magazine : 58). போத்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது இலங்கையின் அரசியல் நிலை இவ்வாறு இருந்தது.

தொடரும்

## கிறிஸ்மஸ் தயாரிப்பு

# பிளம்ஸ் கேக்

**தேவையான பொருட்கள்:**
கோதுமை மா 2 கப்,
உப்பு இல்லாத பட்டர் 1 கப்,
சீனி 2 கப்,
முட்டை 05,
பேக்கிங் பவுடர் 1 தே.கர,
பேக்கிஸ் சோடா 1/2 தே. கர,
உப்பு 1/2 தே.கர
வெனிலா 1தே. கர

**சீனி கரமல்:**
சீனி 1/2 கப்,
தண்ணீர் 1/2 கப்,
சுடு தண்ணீர் 1/2 கப்

**வாசனை பொருட்கள்:**
2” கருவபட்டை 2”,
4 ஏலக்காய் 4,
3 கராம்பு
3,தேவையாயின் சுக்கு சிறிதளவு

**ஊற வைப்பதற்கானவை:**
கப் கருப்பு காய்ந்த திராட்சை பழம்
1.5,பழக் கலவை 1 கப், செறி பழம் 1 கப் விதைகள் (கஜு,பாதாம்,முந்திரி, விரும்பினால் ஈச்சபழம்)
1 கப், திராட்சை சாறு 2 கப்

**செய்முறை:**

பழங்களையும் விதைகளையும் ஒரு பாத்திரத்தில் போட்டு அத்துடன் 2 கப் திராட்சை பழ சாறையும் ஊற்றி இரண்டு நாட்களுக்கு ஊற வைக்க வேண்டும். (ஊற வைக்காமல் உடனடியாக செய்ய வேண்டுமானால் பழங்கள் விதைகளுடன் சாறை ஊற்றி 4 - 5 நிமிடங்களுக்கு கொதிக்க வைத்து ஆற விட வேண்டும்)

**சீனி பாகு செய்தல்:**

ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் 1/4 கப் தண்ணீர் ஊற்றி அதில் 1/2 கப் சீனையை போட்டு கொதிக்க வைக்க வேண்டும். பிரவுன் நிற பாகாக மாறும்போது 1/2 கப் சுடு தண்ணீர் ஊற்றி கிளறி ஆற வைக்க வேண்டும். (குளிர்ந்த நீர் சேர்த்தால் கட்டியாகிவிடும்)

**வாசனை தூள் செய்தல்:**

பட்டை, ஏலக்காய், கராம்பு ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு அதனுடன் 1/2 கப் சீனியையும் போட்டு நன்றாக தூளாக்கிக் கொள்ளவும்.

**கேக்குக்கான கலவை செய்தல்:**

பெரிய பாத்திரம் எடுத்து அதில் 5 முட்டையை உடைத்து ஊற்றிக்கொள்ளவும், ஒரு கப் உருக்கிய வெண்ணை, மிகுதியாக இருக்கும் 1.1/2 கப் சீனியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் தூளாக்கிய வாசனை பொருட்கள் அனைத்தையும் நன்றாக மெதுவாக கலந்துக்கொள்ளவும். பின்பு அதனுடன் 2 கப் கோதுமை மா, பேக்கிங் பவுடர், பேக்கிங் சோடா, உப்பு சேர்த்து மீண்டும் மெதுவாக நன்றாக கிளறி விட்டுக் கொள்ளவேண்டும். அதனுடன் செய்து வைத்த சீனி பாகு, வெனிலா, ஊற வைத்த பழக் கலவையையும் சாறோடு சேர்த்துக்கொள்ளவும். பின்பு நன்றாக கலந்து கிளறிக்கொள்ளவும். பேக் பண்ணும் பாத்திரம் எடுக்கது அதன் ஓரங்களில் பட்டர் தடவி, நடுவில் ஒயில் பேப்பர் வெட்டி போட்டுக்கொள்ள வேண்டும். அதில் கலந்து வைத்துள்ள கேக் கலவையை ஊற்றிக் கொள்ளவும். 350F/180C சூடாக்கிக் கொள்ள வேண்டும். அவனில் வைத்து பேக் பண்ணிக் கொள்ள வேண்டும். சுவையான விளம்ஸ் கேக் தயார்.



# சிரக்கியூசின் கன்னிகையும் வேதசாட்சியுமான புனித லூசியா




கி.பி. 283ம் வருடம் ஓர் உரோமானியத் தந்தைக்கும் கிரேக்க வம்சாவழியாகிய யூட்டிக்கியா (Eutychia) என்ற பெயர் கொண்ட தாயாருக்கும் இத்தாலியில் உள்ள சிரக்கியூஸ் (Syracuse) என்னும் நகரில் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதற்கு பெற்றோர் 'லுசியா' (Lucia) என்று பெயரிட்டனர். லூசியா என்றால் இலத்தீன் மொழியில் ஒளி அல்லது தெளிவு என்று பொருள்படும். இதை இலத்தீன் மொழியில் லுக்ஸ் அல்லது லூசிஸ் (Lux or Lucis) என்று அழைப்பர். இதிலிருந்து மருவி லூசியா (Lucia) வாகியது. லூசியாவின் தந்தையார் அவளின் இளம் வயதிலேயே இறந்ததினால் அவளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு, தாய் யூட்டிக்கியாவின் மேல் சுமத்தப்பட்டது. லூசியாவின் தாயாருக்கு பல வருடங்களாக இரத்தப்போக்கு (Haemorrhage) நோய் இருந்தது. ஆயினும் இளம் லூசியாவாள் தனது தாயாரின் கட்டுப்பாட்டில் கிறிஸ்தவ விழுமியங்களான தேவ பக்தியிலும் கற்பிலும் நன்றாக வளர்க்கப்பட்டாள். அத்துடன் அவள் மற்றுமொரு கிறிஸ்தவ கன்னிகையான 'கற்றானியா" (Catania) என்னும் பெயர்கொண்ட நகரைச் சார்ந்த பெண் புனிதையான ஆகத்தா (Agatha) என்பவரின் வாழ்க்கை முறையால் கவரப்பட்டார். 'கற்றானியா (Catania) என்னும் இடம் சிரக்கியூசியிலிருந்து 50 மைல்கள் தூரத்தில் உள்ளது. புனிதை ஆகத்தாவானவர் 52 வருடங்களுக்கு முன்பு ஆண்டவர் இயேசுவுக்காக வேதசாட்சியாக மரித்தவர். ஆகவே லூசியா தனது தாயார் யூட்டிக்கியாவை அழைத்துக்கொண்டு கற்றானியாவில் உள்ள புனித ஆகத்தாவின் கல்லறைக்கு செல்ல உந்தப்பட்டார். அவ்வண்ணமே இருவரும் புனித ஆகத்தாவின் கல்லறைக்குச் சென்று யூட்டிக்கியாவின் இரத்தப்போக்கு நோய்க்காக ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில் இருவருமே தம்மை அறியாமல் ஆழ்ந்த

ஆக்கம் : ஜே.ஏ. ஆர்.ரஞ்சித் பெர்னாண்டோ

உறக்கத்தினால் ஆட்கொள்ளப்பட்டனர். அவ்வேளையில் புனித ஆகத்தாவானவர், லூசியாவுக்கு ஓர் காட்சியிலே (Vision) தோன்றி லூசியாவிடம் 'நான் கற்றானியாவில் மகிமையடைந்தது போன்று நீயும் வெகு சீக்கிரத்தில் சிரக்கியூசில் மகிமையடைவாய் என உறுதியளித்தார். அந்தக் கணமே யூட்டிக்கியாவின் பல வருடங்களாக வருந்திய இரத்தப்போக்கு நோய் பூரண குணமாகியது. அதைத் தொடர்ந்து லூசியாவும் புனித ஆகத்தாவைப் போலவே ஆண்டவர் இயேசுவுக்காக திருமணம் புரியாமல் தனது வாழ்வை கன்னிகையாக துறவறத்தில் ஈடுபடுத்தத் தீர்மானித்தாள். ஆனால் லூசியாவின் தாயாரான யூட்டிக்கியாவோ மகளின் விருப்பத்திற்கு மாறாக ஓர் அஞ்ஞானியான ஒரு மணவாளனைத் தேர்ந்தெடுத்து லூசியாவிற்கு மண ஒப்பந்தம் செய்ய எத்தனித்தாள். ஆனால் லூசியாவோ அதை ஒரேயடியாக வேண்டாம் என்று மறுத்துவிட்டார். அத்துடன் தனக்குறிய பூர்வீகச்சொத்து அனைத்தையும் விற்று தாராள மனதோடு தனக்கென்று தாயார் சீதமனமாக சேர்த்து வைத்திருந்த அனைத்து பணத்தையும் ஏழை எளியவர்க்கு தானமாக கொடுத்து விட்டார்.

இந்த செயலினால் ஏமாற்றடைந்த மணவாளனுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. அந்த காலகட்டமானது டையோக்கிளேசியன் (Diodetian) என்ற பேரரசனின் ஆட்சியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வேதகலாபனை நடந்த காலமாகும். ஆகவே ஏமாற்றம் அடைந்த அந்த மணவாளன் சிசிலி (Cicily) என்னும் பகுதியை ஆண்டு வந்த பஸ்காசிய்ஸ் (Paschasius) என்னும் ஆளுனரிடம் (Governor) லூசியா ஒரு கிறிஸ்தவள் என்று காட்டிக்கொடுத்தான்.

உடனே ஆளுனன் பஸ்காசியஸ், லூசிவைக் கைது செய்து கொண்டு வந்து பேரரசன் டயோக்கிநேசியனின் உருவச்சிலைக்கு தூபம் காட்டி பணிந்து கொள்ள ஆணையிட்டான். மறுப்புத் தெரிவித்தால் லூசியாவை ஓர் விபச்சார விடுதிக்கு அனுப்பி அவள் பாதுகாத்து வந்த கன்னிமையை மானபங்கப்படுத்தப் போவதாக அறிவித்தான். ஆனால் லூசியா அந்த ஆணையை மறுத்ததினால் அவள் பல காவலர்களை அனுப்பி அவளை விபச்சார விடுதிக்கு கூட்டிச் செல்லுமாறு பணித்தான். அந்த வேளையில் லூசியா இறைவனிடம் மன்றாடியதால் அவள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அவளது மெலிந்த நலிந்த உடம்பானது எவராலும் அசைக்க முடியாத ஓர் பெரிய மலைப்போன்று இறுக்கமடைந்து கொஞ்சம் கூட அசையவில்லை. ஆகவே காவலர்கள் அவளை பல எருதுகளோடு அவளது உடம்பைப் பிணைத்து நகர்த்த முயன்றனர். அப்புறம் அவளது உடல் மேலும் இருக்கமாகி அசையவில்லை. அதிர்ச்சியடைந்த அவர்கள் அடுத்ததாக அவளை உயிருடன் நெருப்பினாலே கொளுத்துவதற்காக அவளது உடலின் மீது ஏராளமான விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்து தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் நெருப்பு அவளைப் பாதிக்கவில்லை. ஆகவே அவளை வதைத்தவர்கள் அவளது....

தொடர்ச்சி 15ம் பக்கம்..


## 23ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு † 1927 † 07 † 16

இறப்பு † 1996 † 12 † 10

S. சத்திய நாதன் ராஜ்

(44349)

## 42ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு † 1942 † 07 † 26

இறப்பு † 1977 † 06 † 24

P. பிலோமினா

(44352)

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு † 1968 † 10 † 09

இறப்பு † 1989 † 12 † 05

S. ஜெயமேரி

(44348)

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு † 2004 † 11 † 13

இறப்பு † 2006 † 03 † 01

M. என்டனி ரோஷன்

(44351)

## 19ம் ஆண்டு நினைவஞ்சலி




பிறப்பு † 1928 † 08 † 03

இறப்பு † 2000 † 03 † 02

என்டனி செபஸ்டியன் பர்னாந்து

(44347)

## 27ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு † 1935 † 01 † 01

இறப்பு † 1992 † 01 † 13

சொலமன் றொட்ரிகோ

(44350)

## 01 நல்லாயன் சபையின்...

இவர் 1989ம் ஆண்டு நல்லாயன் சபையில் இணைந்து நாட்டின் பல பிரதேசங்களிலும் நல்லாயன் சபையின் அப்போஸ்தலிக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். அத்தோடு இவர் முன்னைய மாகாணத் தலைவியர் இருவருக்கு செயலாளராகவும், எமது சபையின் புகு நிலையினருக்கு, நவ கன்னியர்களுக்கு தற்காலிக வாக்குத்தத்தம் செய்த அருட்சகோதரிகளுக்கு பயிற்றுவிப்பாளராகவும், இச் சபையின் அருங்கொடையான நல்லாயன் இயேசுவின் பரிவன்பை சமுதாயத்தில்லுள்ளோருடன் பகிர்வதில் தன்னை அர்ப்பணித்துள்ளார். தற்போது எமது சபையின் அருட்சகோதரிகளின் ஆன்மீக வழிகாட்டியாக செயற்பட்டு வருகிறார்.

அடுத்துவரும் ஆறு வருடங்களும் நல்லாயன் சபையை தொடர்ந்தும் இறை சித்தத்திற்கேற்ப வழிநடத்திச்செல்ல தேவையான அருள் வரங்களை வேண்டி நிற்பதோடு, எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைமைத்துவ குழுவின் அங்கத்தவர்கள்**

இடமிருந்து வலமாக: அருட்சகோதரிகள், ரெஜினா பர்னாந்து, அனட் பெரேரா (தியான யோக சபை ஆலோசகர்கள்), அருட்சகோதரி மேரி ஆன் பெரேரா (புதிய மாகாணத்தலைவி) அருட்சகோதரிகள், சிறிய புஷ்பம், ரொஷான்தி ரன்வத்த, அலெக்சேன்றா மெண்டிஸ், டினாலிகா பெரேரா, தம்மி பர்னாந்து (அப்போஸ்தலிக்க அருட்சகோதரிகளின் ஆலோசகர்கள்)

## 01 2020, இறையியல்...

2020ஆம் ஆண்டு படிப்பைத் தொடங்க விரும்புவர்கள் தங்கள் வசமுள்ள கல்வி ஆவணங்களோடு, நேர்காணலில் கலந்து கொண்டு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். கற்கை நெறி தொடர்பான விபரங்கள் அத்தனையும் நேர்காணல் வேளையிலே பெற்றுக்கொள்ளவும் முடியும்.

நேர்காணலுக்கான விரிவுரை மண்டப விபரங்களை அன்றைய தினம் மாலை 4 மணிக்கு அக்குவைனாஸ் பல்கலைக்கழக, வாயிற்காப்போரிடம் அறிந்து கொள்ளலாம்.

**தகவல் : அருட்பணி. ரெகினோல்ட் அ.ம.தி, இயக்குனர் – தமிழ்**

## 01 இச்சிற்றாலயம்...

ஒரு விளக்காகும். இது சிறிய ஆலயமாக இருந்தாலும் ஆண்டவருடைய பார்வை இது ஒரு மாபெரும் ஆலயம் ஆகும். இவ்வாலயமானது இறையரசை பரப்புவதற்கு எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். இவ்வாலயம் எமது ஒற்றுமையை, விசுவாசத்தை வெளிப்படுத்தும் அடையாளமாகும். புனித சூசையப்பரின் வாழ்வை முன்மாதிரியைக் கொண்டு விசுவதித்து அன்பின் இரக்கச் செயல்களில் வாழ்வோமாக.

**தகவல் : நிக்கலஸ்**

## 03 மரியாவின்...

என்பவரே. "இறைவனின் தாய் எனப்படுபவள் ஒருகணம் கூட பாவத்தின் பிடியில் இருக்கவே முடியாது" என்று பறைசாற்றினார்.

மரியாளின் அமலோற்பவம் மனிதக் கண்டு பிடிப்பு அல்ல. மனித புத்தியினால் இதற்கு விளக்கம் காண்பது கடினமானது. இறைவனின் திட்டத்தில் தோன்றிய இந்த விசுவாச சத்தியத்தை திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1854ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி, முழுக்கத்தோலிக்கத் திருச்சபையும் ஏற்றுக் கொள்ளும் விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்தார். இதனை நாம் விசுவாசத்தினால்தான் ஏற்றுக்கொள்ள முடியும். மரியாள் தனது பிறப்பினாலே மட்டுமல்ல, தனது தூய்மையான வாழ்வினாலும் மாசற்றவளாகத் திகழ்ந்தாள். ஆனால் இன்றைய சமுதாயத்தில் பல தவறான போதனைகளினாலும், முரண்பாடுகளினாலும், விளக்கக் குறைவுகளினாலும், அறியாமையினாலும் அன்னையின் புனிதத் தன்மையில் வினா எழுப்பும் அவிசுவாசிகளுக்கு, உண்மையைப் புரிய வைப்பது கத்தோலிக்க திருச்சபையில் அங்கம் வகிக்கும் எம் எல்லோரினதும் உயரிய பொறுப்பாகும். விஞ்ஞானத்தின் விஞ்சிய வளர்ச்சியினாலும், நாகரீகத்தின் அதி நவீன முன்னேற்றத்தினாலும், அறிவு விருத்தியினாலும் கடவுளே இல்லை என்று வாழும் மனிதர்கள் மத்தியிலும், மனித வல்லமையால் எதனையும் சாதிக்கலாம் என எண்ணி மனிதத்தை நாசம் பண்ணும் மனிதர்கள் மத்தியிலும், மண்டை ஓடுகளை பிரசவிக்கும் மதவெறியர்கள் நடுவிலும் வாழும் அன்னையின் அன்புப் பிள்ளைகளாகிய நாம், அன்னையின் மாசற்ற வாழ்வினூடாக தூய்மையான வாழ்விற்கு அழைக்கப்பட்டுள்ளோம். இவ் அழைப்பை உணர்ந்து எம் வாழ்வை அன்னையின் பாதையில் அர்ப்பணித்து வாழ்ந்தால் இறைவனின் அருட்கொடைகளை நிறைவாக பெற்று வாழலாம். "நாமே அமலோற்பவம்" என்று கூறும் அன்னையின் குரலொலியையும் கேட்டு மகிழலாம்.

## 02 கிறிஸ்து பிறப்பு...

மறந்துவிட முடியாது அவர்கள் அனுபவிக்கும் வேதனையாலும், எதிர்பாரத சம்பவத்தால் அவர்களது வாழ்வின் நோக்கங்கள் தெளிவற்று போயிருப்பாதாலும் எமது சகோதர சகோதரிகளின் பலர் இன்னும் மிகுந்த வேதனையோடு இருக்கின்றார்கள். நடைபெற்ற இந்த தாக்குதலில் அவர்கள் ஏன் இலக்குவைக்கப்பட்டார்கள் என்று அவர்களில் பலர் அறியாது இருக்கின்றார்கள் மேலும் இந்த தாக்குதலுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்களை இன்னும் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை. இந்த வன்முறையை திட்டமிட்டு செய்தவர்களை கண்டுபிடிக்க அதிகாரிகளால் முடியாமல் போய் இருப்பதால், பாதிக்கப்பட்டோரின் மனஉளைச்சலை மேலும் அதிகபடுத்த வழிவகுத்துள்ளது. எம்முடைய சகோதர சகோதரிகளின் அநேகமானோர் இவ்வாறு மிகுந்த வேதனையோடு இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏழைகளிடையே ஏழ்மையான குடிலில பிறந்திட திருவுளம் கொண்ட திவ்விய இரட்சகரின் பிறப்பை பயனற்ற பகட்டான விழாவாக கொண்டாடுவது தகுதி அற்றதாகும்

எனவே, இந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழா நிலவுகின்ற துன்பகரமான நிலையில் துன்பத்தில் வாடுகின்ற எமது சகோதர சகோதரிகள் பால் மனம் செலுத்தி அவர்களுக்காகவும் எமது அன்பான தாய் திருநாட்டிற்காக செபிக்கவும் பல்இன மக்களிடையே அமைதி, நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப செய்திடவும், அனைவர் மீதும் பணிவுள்ள எண்ணங்களை உருவாக்கிக்கொள்ளவும் இயலுமானால் விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சென்று சந்திக்கவும் அவர்களுக்காக செபிக்கவும், அவர்கள் தனித்து போய்விடவில்லை என அவர்களை திடப்படுத்த கூடிய விடயங்களை மேற்கொள்ளவும், அவர்களின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக, கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும், அதற்கு தேவையான நன்கொடைகளை எமக்கு கிடைக்கப்பெற செய்யவும் பகட்டான அலங்காரங்கள் மற்றும் கிறிஸ்து பிறப்பு விழா வலயங்கள் விருந்துகள் மற்றும் விழாக்கள் போன்றவற்றை இயன்ற அளவு தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். சுருக்கமாக கூறினால் இம்முறை கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை ஏழைகள், ஒதுக்கப்பட்டோர் விஷேட விதமாக பாஸ்கா தினம் இடம்பெற்ற தாக்குதலால் துன்புறுபவர்களுடன் ஆழமான புரிதலுடன் செலவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இம்முறை கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை இலங்கை தீவில் உண்மையான அமைதி நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவை உருவாக செபிக்கும் சிறப்பான தருணமாக்கிக்கொள்ளுங்கள் அனைத்தையும் கைவிட்டு ஏழைகளிடையே ஏழை குடிலில் பிறந்திட விருப்பம்கொண்ட இறைத்தந்தையின் மகனாகிய ஆண்டவர் இயேசுவை பற்றி தியானித்து துன்புறும் அனைவரிடமும் அன்பையும் இரக்கத்தையும் காட்டுவதால் இம்முறை கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை ஆன்மீக மகிழ்ச்சியின முழுமையான அனுபவமாக மாற்றிக் கொள்ள உங்களுக்கு இயலுமாகட்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன் எனவே வரவிருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா காலத்தினதும் புது வருடத்திலும் குழந்தை இயேசு மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் உங்கள் அனைவருக்கும் வழங்குவாராக

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்**

## உணவு பழக்கம் பழிமொழி வடிவில்

1. சீரகம் இல்லா உணவு சிறக்காது.
2. தன் காயம் காக்க வெங்காயம் போதும்
3. வாழை வாழ வைக்கும்
4. அவசர சோறு ஆபத்து
5. இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு.
6. ரத்த கொதிப்புக்கு அகத்திக் கீரை.
7. இருமலை போக்கும் வெந்தயக்கீரை
8. உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்
9. உஷ்ணம் தவிர்க்க கம்பங்களி.
10. கல்லீரல் பலம் பெற கொய்யா பழம்
11. கொலஸ்ட்ரால் குறைக்க பன்னீர் திராட்சை
12. சித்தம் தெளிய வில்வம்
13. சிறுநீர் கடுப்புக்கு அண்ணாசி
14. சூட்டைத் தணிக்க கருணைகிழங்கு
15. ஜீரண சக்திக்கு சுண்டைக்காய்
16. தலைவலி நீங்க முள்ளங்கிச் சாறு
17. தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை
18. பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி.
19. மூல நோய் தீர வாழைப்பூ கூட்டு
20. குடல்புண் நலம்பெற அகத்தீக்கீரை

## 05 கிறிஸ்தவர்கள்...

எம்மைப்புதுப்பிக்கவும், அர்ப்பணிக்கவும் எமக்குக்கிடைத்த இறைவாக்கினர் ஒருவரின் செய்தியாகும்.

Maximum Illud என்ற சுற்றுடல் வெளியிடப்பட்ட ஐம்பதாவது வருட நிறைவில் திருத்தந்தை புனித 2ம் யோண் பவுல் அவர்கள், "இயேசுவின் நற்செய்திப்பணி இன்னும் திருச்சபையின் பணியால் நிறைவு காணவில்லை. மானிட சமூக தேவைகளும், ஏக்கங்களும் நற்செய்திப்பணியின தேவையை உணர்த்துகிறது. அர்ப்பணிக்கப்பட்ட, நிந்தனையற்ற பணி ஒன்றே தேவை. கிறிஸ்தவ அர்ப்பணத்தில் புதுப்பித்தல் ஏற்பட்டால் மட்டுமே திருச்சபையின் வாழ்வில் புதுப்பித்தல் ஏற்படும், நம்பிக்கை வலுவூட்டம் பெறும், கிறிஸ்தவ தனி அடையாளம் உறுதிப்படுத்தப்படும்" என்று கூறிய கருத்து இங்கு நினைவுகூரப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும், "திருச்சபை எனும் இறை சமூகம் கிறிஸ்துவினுடையவும், கடவுளுடையதுமான இறையரசை அறிவித்து, அந்த அரசின் வித்தாகவும், தொடக்கமாகவும் இருக்கிறது. இச்சமூகம் படிப்படியாக வளரும் வேளையிலே இவ்வரசின் நிறைவுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது" என "திருச்சபை" எனும் கோட்பாட்டியலில் (எண். 5) 2ம் வத்திக்கான் சங்கம் கூறும் ஏக்கம் இன்றும் கிறிஸ்தவ விசுவாசிகளின் ஏக்கமாகிட தேவை உண்டு.


இறுதியாக, "தங்கள் அனுபவத்தைக் கொண்டிராத எதையும் ஏற்க இன்று மக்கள் தயங்குகின்றனர். சமயத் திருநூல்களோ, மரபுகளோ சொல்கின்றன அல்லது சமயத்தலைவர்கள் கூறுகின்றார்கள் என்ற ஒரே காரணத்தால் எதையும் ஏற்கும் மனநிலை இன்று மாறிவருகிறது. எனவே சமயங்களும் தங்கள் அனுபவத்தில் வேறூன்றிக் கொள்வது இன்றைய காலத்தின் கட்டாயம்" என்று இந்திய இறையியலாளர் கூறும் இந்தநாள் கருத்து அன்று திருத்தந்தை அவர்கள் மறைபணியாளர்கள் இயேசு அனுபவம் பெற்றிருப்பது அவர்களது அடிப்படையும், இன்றியமையாத தகைமை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

## 10 விவிலிய வினா விடை

138. திருமுழுக்கு யோவான், எலியா, இறைவாக்கினருள் ஒருவர் (8:28)
139. பேதுரு (8:29)
140. கொலை செய்யப்பட்டு 3ம் நாள் உயிர்தெழுதல் பற்றி போதித்தார். (8:31)
141. பேதுருவை 8:33)
142. தன்னலம் துறந்து (8:34)
143. இயேசுவின் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் (8:35)
144. வாழ்வை (8:36)
145. இறையாட்சி வல்லமையோடு வந்துள்ளதை (9:1)
146. ஆறு (9:2)
147. பேதுரு, யாக்கோபு, யோவான் (9:2))

## 14 சிரக்கியூசின் கன்னியுமான...

அழகிய இரண்டு கண்களையும் பிடுங்கி எடுத்தனர். ஆனால் அவையும் அற்புதமாக இறைவனால் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் லூசியா பார்வையற்றோரின் பாதுகாவலியாக ஏற்படுத்தப்பட காரணமாகியது. இறுதியாக கொடுமையான ஒரு குறுவாள் ஒன்றினால் அவளது தொண்டையை உருவிச்செல்லக் குத்தினார்கள். அவ்வேளையிலும் அவர் தன்னை வதைத்தவர்களுக்கு எதிராக இறைவாக்கு உரைத்து அவளின் நாயகனாகிய ஆண்டவர் இயேசுவுக்குப் பிரமாணிக்கமாகவும் ஓர் கன்னிகையான வேதசாட்சியாக தனது 21வது இளம்வயதில் தமது சொந்த ஊராகிய சிரக்கியூசில் கி. பி. 304ம் வருடம் மரித்தார். இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்து தனது அசைவுராத கிறிஸ்தவ விசுவாசத்தினாலும், அர்ப்பணத்-தினாலும் தனது கன்னித்தன்மையைப் பாதுகாத்து வேதசாட்சியாக மரித்த காரணத்தினாலேயே விண்ணுலக கிரீடத்தை சுவீகரித்ததன் மூலம் ஆதித்திருச்சபை அவளை இறை இராச்சியத்தின் புனிதர் பட்டமளித்து புனித லூசியா என்று மகிமைப்படுத்தியது. அத்துடன் ஆதித்திருச்சபையானது சிறப்புத் திருப்பலிகளில் அன்னை மரியாளோடும் மற்றும் பெண் புனிதைகளாகிய சூசுத்தா, அக்னெஸ், பார்பரா, கத்தரீன், தெக்லா இவர்களோடு புனித லூசியாவையும் சேர்த்து மகிமைப்படுத்துகிறது. புனித லூசியா, கிறிஸ்தவ கன்னிகையும் வேதசாட்சியுமாக கத்தோலிக்க திருச்சபையினால் மட்டுமன்றி, ஆங்கிலிக்கன், கீழைத்தேச மரபு வழுவாத திருச்சபை, லூத்தரன் திருச்சபைகளினாலும் மரியாதை அளிக்கப்பட்டு மதிக்கப்பட்டு டிசம்பர் மாதம் 13ம் திகதியிலே திருவிழா கொண்டாடப்படுகிறது. மேலும் ஸ்காண்டிநேவியன் நாடுகளிலும் புனித லூசியாவுக்கு சிறப்பு திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது.



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

- கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள டிலாசால் துறவற சபைச் சகோதரர்களால் 2019ல் மார்கழி, க.பொ.த சா/த முடித்தவர்கள், க.பொ.த உ/த முடித்தவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோருக்காக நடாத்தப்படும் ஆங்கில பயிற்சி நெறி.
- கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் புரட்டாதி மாதம் 15ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

| | | |
|---|---|---|
| 1. செவிமடுத்தல் | 2. கதைத்தல் | 3. வாசித்தல் |
| 4. இலக்கணம் | 5. சொல்லகராதி | 6. வாக்கிய அமைப்பு |
| 7. மரபுத்தொடர் | 8. நேர்த்தியான ஆங்கிலம் | 9. சொல்லிலக்கணம் |
| 10. வார்த்தை விளையாட்டு | 11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு | 12. ஆங்கில பாடல்கள் |
| 13. ஆளுமை வளர்ச்சி | 14. உணவுக் கருவிகளின் பாவனை முறை | |

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

தை மாதம் 3ந் திகதி தொடக்கம் பங்குனி மாதம் 3ந் திகதி 2020 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை

(40463)

தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்

- விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அருட்சகோ. அகஸ்ரின் ஜெயந்த சில்வா, 071 – 2188551
- பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2020, தை மாதம் 3ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு. 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071–2188551






# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழில்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com



## கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்